விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை (22.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

# போருக்குப் பின்னரான நிலைகுறித்து ஐ.நா சபை அதிகாரி ஆராய்வு !

## நேற்று கூட்டமைப்புடன் சந்திப்பு

(கொழும்பு) ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் டிரான்கோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினருடன் நேற்று சனிக்கிழமை நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையிலுள்ள ஐ.நா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11.15 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதுடன், இவ்விரு தரப்பினரும் மீண்டும் இன்று சந்தித்து பேசுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச் சந்திப்பில்

23ஆம் பக்கம் பார்க்க....



## பாதுகாப்புச் செயலரை கொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை படுகொலை செய்ய சூழ்ச்சித் திட்டமொன்று தீட்டப்பட்டதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் புலி ஆதரவாளர்களினால் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுவினரை பயன்படுத்தி கோத்தபாயவை படுகொலை செய்ய திட்டமிடப்பட்டிருந்ததாக

23ஆம் பக்கம் பார்க்க....

## மட்டு.காட்டில் ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் இருந்து ஒரு தொகுதி ஆயுதங்களை நேற்று மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரீ- 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 7 மகஸின்கள் மற்றும 250 தோட்டாக்கள் என்பவற்றையே பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் பயிர்ச் செய்கைக்காக காட்டுக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## முல்லைத்தீவிலிருந்து தமிழகத்துக்கு அகதிகள்

(சென்னை)

தமிழ்நாடு, தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கு முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த நான்கு பேர் படகு மூலம் அகதிகளாகச் சென்றடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியை சேர்ந்த அந்தோணி குரூஸ் இவரது மனைவி செல்வி குரூஸ் மற்றும் இவர்களது குழந்தைகளான ரோமேரியா, ரியான்ச் ஆகிய நான்கு பேருமே தமிழகம்

23ஆம் பக்கம் பார்க்க....

## 'நோ லிமிட்' வியாபார நிலையம் நேற்று அதிகாலை தீக்கிரை

### முஸ்லிம்களுக்கு சொந்தமானது



(கொழும்பு)

கொழும்புக்கு அருகே உள்ள பாணந்துறை நகரில் அமைந்துள்ள முஸ்லிம் வியாபாரி ஒருவருக்கு சொந்தமான 'நோ லிமிட்' எனும் ஆடை வர்த்தக நிறுவனமொன்று தீக்கிரையாகியுள்ளது.

நேற்று அதிகாலை 3.15 அளவில ஏற்பட்ட இந்தத் தீவிபத்தில் கட்டிடம் முற்றும்

23ஆம் பக்கம் பார்க்க....

## அளுத்கம வன்முறை குறித்து அமெரிக்கா மீண்டும் அக்கறை

(வாஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்று வரும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டியவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் மிகவும் கவலை

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா விசாரணைக் குழுவின் 2ஆவது நிபுணர் நியமனம்

(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை மீதான விசாரணைக் குழுவில் இரண்டாவது நிபுணராக, பின்லாந்தின் முன்னாள ஜனாதிபதி மாரரி அரிசாரி நியமிக்கப்பட்டுள்ளதாக நியூசிலாந்து வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25-வது

24ஆம் பக்கம் பார்க்க....



## எல்லை மீறும் வன்முறைகள்

# முஸ்லிம் அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதியுடன் அவசர சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் முஸ்லிம் மக்கள் மீதான வனமுறைகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முஸ்லிம் அமைச்சர்கள் நேற்று சனிக்கிழமை பதுளையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாணந்துறையில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 'நோ லிமிட்' ஆடை வர்த்தக நிறுவனத்தின் காட்சியறை நேற்று அதிகாலை தீக்கிரையான சம்பவம தொடர்பில் ஆராய்வதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி யமைச்சருமான ரவூப் ஹக்கீம் அங்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில் அவர் உடனடியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி ரவூப் ஹக்கீம் அவசரமாக சந்திக்க வேண்டியதன அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தான் பதுளைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்

23ஆம் பக்கம் பார்க்க....




SISIL WORLD
கோடைகாலத்தை குளிர்மையானதாக்க உலகத்தரம்வாய்ந்த
SISIL, WELLING, KDK,ROWENTA,SYMPHONY
எயார்கூலர் மற்றும் மின்விசிறிகள்
120 நாள் வட்டி இன்றிய கொடுப்பனவு
விசேட விலைக் கழிவுகள்
3வருட நீடித்த உத்திரவாதம்
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219294
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-7717)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# German Language Academy
## (ஜேர்மன் கல்லூரி)

ஜேர்மன் சுவிஸ் டொச் மொழிகள் Mr.S.கோணேஸ்வரன் அவர்களால் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தி அடையச் செய்த ஒரேயொரு ஆசிரியராவார். உங்கள் பணத்தையும் நேரத்தையும் வீண்விரயம் செய்யாமல் உங்கள் சரியான தெரிவின் மூலம் இலக்கை அடைந்து கொள்ளுங்கள்.

**அவதானிப்பு :-** போலியான விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். எமது மாண வர்கள் ஒவ்வொரு பரீட்சையிலும் 90 % மாணவர்கள் முதல் தடவையிலேயே சித்தி அடைவது குறிப்பிடத்தக்கது.

**Note :-** புதிய பிரிவுகள் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளன.

எமது நிறுவனத்தில் கல்வி கற்று பரீட்சைக்குத் தோற்றி சித்தி எய்திய மாணவர்கள் கற்பித்த ஆசிரியருடன் முன்னைய வலம்புரிப் பத்திரிகையில் புகைப்படத்துடன் செய்தியாக பிரசுரிக் கப்பட்டதை காணக் கூடியதாக இருந்தது. தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்.

**German Language Academy**
பலாலி வீதி, ஆரியகுள சந்தி, யாழ்ப்பாணம்.
(6920) **T.P : 077 9707 322**

NORTH LEAD
Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

## SAMSUNG Smart Tab FOR SALE
யாழ் மற்றும் கிளிநொச்சி நகரில் 20% விலைக்கழிவில்



Item Type: Tablet PC, Data Capacity: 8GB, Network: Build in 3G, Bluetoth, Wifi. Processor: 1.2GHz Quard-Core, Ram: 1GB, Operating System: Android 4.2.2, Camera: 2.0mp front 5.0mp back, Feature: GPS, Multy Touch, HDMI, G Sensor, Phone Call, FM, USB, Dual Camera, Dual Sim(Warranty 1Yrs) ~~Rs. 24500/-~~, Rs.19600/-

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390


# 250 ஆடுகள் பலியிடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை துர்க்காபுரம் பேரம பல வைரவர் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை சுமார் 250 இற்கும் மேற்பட்ட கடாக்களும் நூற்றுக்கு மேற்பட்ட சேவல்களும் வேள்வியில் வெட்டிச்சரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்களில் உயிர் பலியிடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று அதிகாலையில் 250 இற்கும் மேற்பட்ட ஆட்டுக் கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் அதிகாலை வேளை இடம்பெற்ற பொங்கல் வழிபாடுகளைத் தொடர்ந்து வேள்வி இடம்பெற்றது. நீதிமன்ற அறிவுறுத்தலுக்கு ஏற்ப சுகாதார முறைப்படியே கடாக்கள் சேவல்கள் வெட்டப்பட்டன என்றும் பொது மக்கள் வெட்டும் காட்சியைப் பார்வையிடா வண்ணமே பலியிடல் நடைபெற்றது என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

வலி. வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச சபையின் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கடாக்களைப் பரிசோதனை செய்து அவற்றை வெட்ட அனுமதித்தனர்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மகக்கள் வேள்வியில் கலந்து கொண்டனர்.(எ-6)

# சாட்டிக் கடலில் முதியவர் மரணம்



(யாழ்ப்பாணம்)

சாட்டிக் கடலில் மூழ்கி வயோதிபர் ஒருவர் நேற்று சனிக்கிழமை உயிரிழந்தார்.

குடும்பத்தினருடன் சாட்டிக் கடலில் குளிக்கச் சென்ற இவர் நேற்று மாலை கடலில் மூழ்கி மரணமானார்.

மானிப்பாய் வீதி, கொட்டடியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் நடராஜா (வயது 84) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் போதனா வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-11)


## காணி விற்பனைக்கு

யாழ். Bus நிலையம் அருகில் Tutory கடை கட்டுவதற்கு உகந்த 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0779491088, 0772018492 (6921)

## ALL OUT
Pest Control Service



கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை
உத்தரவாதத்துடன்
பாதுகாத்துக் கொடுக்க
நாங்கள்
இருக்கின்றோம்
(6926)

தொடர்புகளுக்கு
ந.ரூபகாந்த் : 0771515897, 0214993200

## வீடு வாடகைக்கு

இல.46, கோயில் வீதி, (சிவன் வீதிச் சந்திக்கருகில்) நல்லூர்எனும் முகவரியில் 4 அறைகள், வீட்டிற்குள் இணைந்த குளியலறையுடன் முற்றிலும் Tiles பதிக்கப்பட்ட சொகுசு வீடு வாடகைக்கு உண்டு. 6 வாகனங்கள் நிறுத்தக் கூடிய நிலப்பரப்பு, நல்ல குடிநீர் உள்ள வெட்டுக் கிணறு, மோட்டார், நீர்த்தாங்கி வசதிகள் அனைத்தும் உண்டு.

தொடர்பு: 077 7355 096 (C-7721)

## தொழில்வாய்ப்புகள்

பிரகாசமான வாழ்வுக்கு அரியதோர் சிறந்த வேலைவாய்ப்பு. கொழும்பை அண்மித்த பகுதிகளில் ஜேம்/கோடியல்/பிஸ்கட்/பிளாஸ்ரிக்/PVC/கிளவுஸ்/யோகட்/சோயா போன்றவற்றுக்கு + உற்பத்தி + லேபல் + தரம்பிரித்தல் + ஏற்றுமதி + இறக்குமதி பிரிவுக்கு 18-50 வயது ஆண்-பெண் தேவை. மற்றும் தனியார் துறைமுகம்/விமான நிலையத்திலும்/தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல வெற்றிடம். சம்பளம் 19000/- 38000/-மேலதிக விபரங்களுக்கு.

தொடர்பு :- 0778430179 (C-7715)

## 3 Month Certificate Courses

| | | | |
|---|---|---|---|
| Basic English | - 1500/- | IELTS | - 10,000/- |
| Advanced English | - 1500/- | பேச்சுச் சிங்களம் | -1500/- |
| Spoken English | - 1500/- | எழுத்துச் சிங்களம் | -1500/- |

Success Language Centre
11, Kasthuriyar Lane, Jaffna.
T.P: 0776408622
(6925)

புதிய பிரிவுகள்
22.06.2014
ஞாயிறு ஆரம்பம்

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(C-7719)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER


# மரண அறிவித்தல்கள்



## திருமதி தங்கராசா மரகதம்

முள்ளியவளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா மரகதம் நேற்று (21.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை - செல்வி ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், சின்னத்துரை, நல்லையா, கந்தப்பிள்ளை, செல்லையா, இராசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற பிள்ளையம்மாவின் மைத்துனியும் செல்லம்மா, அன்னலட்சுமி, பரஞ்சோதி (சட்டத்தரணி, முல்லைத்தீவு), மனோகரி, சுப்பிரமணியம், கணேசலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர்,யாழ் பல்கலைக்கழகம்), தில்லைநடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் தனபாலசிங்கம், நாகராசா, விக்னேஸ்வரி, சிவலிங்கம் (கிராம சேவையாளர்,தண்ணீரூற்று கிழக்கு), வக்சலாதேவி, சாந்தினி (கல்வி அமைச்சு வடமாகாணம்), வனிதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிறு மாலை 4 மணிக்கு 3-ம் வட்டாரம் முள்ளியவளையிலுள்ள அவரது மகன் த.பரஞ்சோதி அவர்களின் இல்லத்தில நடைபெற்று பூதவுடல் நாவற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறறார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**3-ம் வட்டாரம், முள்ளியவளை.**
**0212061041**
(6928)
**தகவல் : குடும்பத்தினர்.**

## திருமதி நடராசா செல்லம்




துன்னாலை அல்லையம்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா செல்லம் நேற்று (21.06. 2014) சனிக்கிழமை இறையடி சேர்ந்து விட்டார். அன்னார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பாதுகாவலராகக் கடமையாற்றிஓய்வுபெற்ற ஆழ்வாப்பிள்ளை நடராசாவின் பாசமிகு பாரியாரும் திருமதி மணிமாலா மகேஸ்வரன் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரன், திருமதி வனிதா, புகழேந்திரன், நவநீதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22.06. 2014) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லையம்பதி,**
**துன்னாலை, கரவெட்டி.**
(C-7722)
தகவல் : குடும்பத்தினர்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **சிதம்பரநாதன் ஆறுமுகநாதன்**
(முன்னாள் இளைப்பாறிய மாவட்ட செயலக பிரதம இலிகிதர்)

தோற்றம் 22-05-1934 மறைவு 25.05.2014

25.05.2014 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து துயரத்தில் பங்கு கொண்டவர்கள், அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்தவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எதிர்வரும் 24.06.2014 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

பெரிய கிளானை, வியாபாரிமூலை
பருத்தித்துறை.
(சி-7709)
நீங்கா நினைவுகளுடன்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறை பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.நாவாந்துறை பகுதியிலுள்ள எம்.ஓ.வீதியில் அமைந்துள்ள கமால் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மேற்படி தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பள்ளிவாசல் யன்னல் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அளுத்கம, பேருவளை, தர்கா போன்ற பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இணைந்து நேற்று முன்தினம் காலை யாழ். மத்திய பேருந்து நிலையம் முன் பாக கண்டனப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்ததோடு,



இதில் பெரு மளவான முஸ்லிம்களும் பங்கு கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டிருந் தனர். இந்நிலையில் பள்ளிவாசல் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதலைக்கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போதும் யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

நாட்டில் பல பாகங்களிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக தாக்குதல்கள் நடைபெற்று வரும் நிலையில் யாழிலும் இது தொடர்வதால் யாழ். முஸ்லிம் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

மேற்படி தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4-6)

# கூட்டங்களில் கலந்துகொள்ள அசாத் சாலிக்கு தடைவிதிப்பு

(கொழும்பு)

தமிழ்,முஸ்லிம் ஒற்றுமைக்காக குரல் கொடுத்து வரும் அசாத்சாலிக்கு பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ள நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, பொதுபல சேனா போன்ற சிங்கள இனவாத அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார்.

மறுபுறத்தில் தமிழ்,முஸ்லிம் ஒற்றுமைக்கு தன்னாலான முயற்சிகளையும் எடுத்து வருகின்றார். மேலும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் சிறுபான்மை விரோதப் போக்குகளையும் துணிச்சலுடன் எதிர்த்து வருகின்றார்.

இந்நிலையில் அசாத் சாலியின் நடவடிக்கைகள் இனவாத கண்ணோட்டத்தில் அமைந்திருப்பதாக கூறி, அவருக்கு எதிராக நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இனிவரும் காலங்களில் அவர் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவோ, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பதற்கோ தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதற்கிடையே அளுத்கம வன்முறைகளுக்கு ஞானசார தேரரின் இனவாத உரைதான் அடிப்படை யாக அமைந்திருந்ததாக ஊடகவியலாளர்கள் சுட்டிக் காட்டியதற்கு, அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் இருப்பதாக பொலிஸ் திணைக்கள ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

ஞானசார தேரர் முஸ்லிம் வர்த் தக நிலையங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று கூறி னாரே தவிர, அவர் தாக்குதலில் பங்கெடுக்கவில்லை என்றும் அதன் காரணமாக அவருக்கு எதி ராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# விசா நடைமுறைகளை கடுமையாக்க நேரிடும்-முஸ்லிம் நாடுகள் எச்சரிக்கை!

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென குறித்த முஸ்லிம் நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

முஸ்லிம்களுக்கு எதிராக அடக்குமுறைகளை பிரயோகிப்போர் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்கத் தவறினால் இலங்கைக்கான விசா நடைமுறைகளை கடுமையாக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், ஈராக், ஈரான், மலேஷியா, கட்டார், இந்தோனேஷியா, குவைத, மாலைதீவு, பாலஸ்தீனம், பாகிஸ்தான், நைஜீரியா, துருக்கி, சவுதிஅரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளன. இராஜதந்திர காரியாலயங்கள் ஊடாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விசா முறைமை கடுமையாக்கப்பட்டால் தற்போது வெளிநாடுகளில் பணியாற்றி வரும் பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்களே பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் 'இவ்வாறான எச்சரிக்கைகள் எதுவும் தமக்கு விடுக்கப்பட்டதாக தெரியவில்லை என வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். இலட்சக் கணக்கான இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வருகின்ற போது இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பாணந்துறையில் அமைந்துள்ள நோலிமிட் ஆடை வர்த்தக நிலையம் நேற்று அதிகாலை தாக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்துசமய நூல்கள் கொள்வனவு செய்யப்படும்

(கொழும்பு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கை தமிழ் எழுத்தாளர்களிடம் இருந்து ஒரு குறித்த அளவிலான நூல்களை கொள்வனவு செய்து வருடந்தோறும் பிரதான நூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ் இலக்கியம்,கவிதை, ஆய்வுக்கட்டுரைகள், சிறுவர் இலக்கியம் போன்ற நூல்கள் கொள்வணவு செய்யப்படுகின்றன.

எனினும் இந்து சமய தத்துவங்கள், கட்டுரைகள், சிறுவர்களுக்கான ஆக்கங்கள், தொகுப்புகள் என்பவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் இத்திட்டத்தில் திணைக்களம் இந்துசமய நூல்களுக்கு முன்னுரிமை அளித்துவருகின்றது.

அந்த வகையில் இந்து சமயம் சார்ந்த நூல்களைப் படைக்கும் எழுத்தாளர்கள் நூலின் ஒரு பிரதியோடு கோரிக்கைக் கடிதம் ஒன்றினையும் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

திணைக்களத்தில் நூல்களை மதிப்பீடு செய்யும் குழுவே நூல் கொள்வனவு தொடர்பாக தீர்மானித்து உரிய எழுத்தாளர்களுக்கு அறிவிக்கும் எனத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# முல்லை.படைத்தலைமையகத்தில் ஆடை உற்பத்தி பயிற்சி நிலையம்

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு ஆடை உற்பத்திப் பயிற்சிகளை வழங்குவதற்காக முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிலையம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், ஹைட்ராமணி தனியார் ஆடைத் தொழிற்சாலை நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் டோனி நடராஜா ஆகியோர் இந்த தொழிற் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தனர்.

இந்த நடவடிக்கைகளின் பயனாக யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 350 இளைஞர், யுவதி கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள வுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் 35 பேருக்கு முதற்கட்டமாக இரண்டு மாத கால பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் அதனைத தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனையோருக்கும் படிப்படியாக தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான முழுமை யான பயிற்சி நடவடிக்கைகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் இந்த பயிற்சி காலப் பகுதிக்குள் 10 ஆயிரத்து 500 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதுதவிர உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் இந்த மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகள் எதிர்கொள்ளும் தொழிலில்லா பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவுள்ளதுடன் வாழ்வாதாரம் மேம்படவுள்ளது.

தொழிற்பயிற்சிநிலைய திறப்பு விழா நிகழ்வில் பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகள் உட்பட முதற்கட்டமாக பயிற்சிகளை பெற்றுக் கொள்ளவுள்ள இளைஞர், யுவதிகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் இந்த ஆடைத் தொழிற்சாலை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இராசி பலன்

22.06.2014
(ஆனி 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
தசமி பிற்பகல் 1.16 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 1.15 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சுபநேரம் 8.54-10-24 மணிவரை

வளவன்

**மேடம்** திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** எதிலும் பொறுமையாகச் செயற்படுவது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர் தொடர்புகளால் நன்மையுண்டு, எதிர்பார்த்த பணவரவுகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றி மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்துதவுவார்கள்.

**சிம்மம்** எதிர்ப்புகள் அகன்று தொழில் விருத்தி ஏற்படும்,மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கன்னி** ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொருவகையில் செலவாகலாம், பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உடன் பிறப்புக்களின் வழியில் உதவிகள் கிடைக்கும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**தனுசு** எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், மனதில் புதிய சிந்தனைகள் உதயமாகும்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றங்கள் ஏற்படலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள்.

**கும்பம்** பொன்னான நாள், மூத்தசகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள் பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரின்றி காணப்படும் கற்கோவளம் பொதுச்சந்தை

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் சந்தைப்பகுதியின் சுற்றுப்பகுதிகள் நீண்டகாலமாக பற்றைகள் நிரம்பி கவனிப்பாரின்றிக் காணப்படுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட குறித்த சந்தைத் தொகுதியின் சூழல் கடந்த 10 வருடகாலமாக பற்றைகள் மற்றும் மரங்கள் நிரம்பிக் கவனிப்பாரின்றிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தைத் தொகுதியைய சுற்றிப் பற்றைகள், மரங்கள் காணப்படுவதைச் சாதகமாகப் பயன்படுத்தி மக்கள் கழிவுகளை கொட்டுவதால் துர்நாற்றம் வீசுவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.


அத்துடன்நுளம்புகளின்தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

சந்தையின் இவ்வாறான நிலையால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக பொதுமக்கள் பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறித்த சந்தைத் தொகுதிக்கு தினமும் வரி அறவீட்டுக்காக வரி அறவீட்டாளர்கள் வருகின்றனர்.


இதன்போது இவ்வாறான குறைபாடுகள் வியாபாரிகளால் வரி அறவீட்டாளர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதும் இதுவரை காலமும் இப்பிரச்சினைகளுக்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே கவனிப்பாரின்றி காணப்படும் குறித்த சந்தையை சுற்றியுள்ள பற்றைகள் மற்றும் மரங்கள் என்பவற்றை நீக்கவேண்டும் என வியாபாரிகள் பருத்தித்துறை பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-19)


நன்றி-மிரர்

# சங்கானையில் மீன்சந்தையை நிர்மாணிக்க நடவடிக்கை

(மானிப்பாய்)



சங்கானையில் புதிய மீன் சந்தைக்கான கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சங்கானை சந்தையில் மீன் சந்தைக்கென ஒதுக்கப்பட்ட இடம் போதுமானதாக இல்லாத நிலையில் வர்த்தகர்களும், பொதுமக்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கி இருக்கின்றனர்.

இந்நிலையில், புதிய மீன் சந்தையை அமைப்பதன் அவசியம் குறித்து பலதடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இச்சந்தைக்கென சங்கானை பட்டினசபை அபிவிருத்தி சங்கத்தினர் புதிதாக காணியொன்றினை கொள்வனவு செய்திருந்தனர்.

இக்காணி தொடர்பாக கமநல சேவைகள் திணைக்களத்தினதும், நீதிமன்றத்தினதும் அனுமதிக்காக காத்திருந்த நிலையில் இரண்டினதும் அனுமதிகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் புதிய மீன்சந்தைக்கான கட்டட நிர்மாணப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதேச சபை செயலாளர் திருமதி சாரதாதேவி உருத்திரசாம்பவனுக்கு அமைச்சர் பணிப்புரையை விடுத்துள்ளார்.

சங்கானை பட்டினசபைக்குட்பட்ட பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக நிர்மாணிக்கப்படவுள்ள இப்புதிய மீன்சந்தையின் ஊடாக வர்த்தகர்களும், மக்களும் இதுவரை காலமும் எதிர்நோக்கி வந்த இடர்பாடுகளுக்கு உரிய வகையில் தீர்வு காண முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான சிறுநகர கிராம எழுச்சித் திட்டம் மூலம் 92 வீதமும, பிரதேச சபை மூலம் 5 வீதமும், மக்கள் பங்களிப்பு மூலம் 3 வீதமுமாக இப்புதிய சந்தை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதன்போது யாழ்.மாவட்ட கமநலசேவைகள் உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ய.யக்சி கொன்ஸ்ரைன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். (அ-23)




# மஹோற்சவம்

(பருத்தித்துறை)

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை வீரபத்திரர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 2 திகதி வேட்டைத் திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு இரதோற்சவமும் நடைபெற்று மறுநாள் காலை 6 மணிகசு சமுத்திர தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

மற்றும் எதிர்வரும் 28ஆம் திகதி தேர் வெள்ளோட்டமும் இடம்பெறும் என ஆலய தலைவர் நவரத்தினராசா தெரிவித்துள்ளார். (அ-10)

✦✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கணேச லிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்..

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 3 திகதி வியாழக்கிழமை பகல் 1.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும்.

மறுநாள் நண்பகல் 12.30 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

உற்சவகாலத்தில் முற்பகல் 11 மணிக்கும் மாலை 6 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார்.

✦✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு நடுக்குறிச்சி பெருங்கடி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 3 திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டை திருவிழாவும் மறுநாள் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் தொடர்ந்து அன்றைய தினம் மாலை 6 மணிக்கு மணற்கிணற்றடி சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் வசந்தமண்டப்ப பூசையைத் தொடர்ந்து விநாயகப் பெருமானுக்கு தமிழில் அர்ச்சனை இடம்பெறும். (அ)

# கும்பாபிஷேகம்

(தும்பளை)

வடமராட்சி தென்புலோலி அருள்மிகு மூச்சன் புலோ சிவனாலயத்தின் கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வல்லிபுர ஆழ்வார் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கணபதிசாமி சுதர்சனக்குருக்கள், பிரம்மஸ்ரீ கணபதிசாமி புருசோத்தம குருக்கள் ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை கிரியைகள் இடம்பெற்று 3ஆம் திகதி வியாழக் கிழமை எண்ணெய்க்காப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-19)

# மாம்பழத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி அருள்மிகு திக்கரை முருகன் ஆலயத்தின் மாம்பழத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று முற்பகல் 9.50 மணிக்கு வசந்தமண்டப பூசையும் தொடர்ந்து சுவாமி வீதி வலமும் மாலை 4 மணிக்கு மாம் பழத்திருவிழாவும் தொடர்ந்து 6 மணிக்கு பழனி முருகனுக்கு விசேட பூசைகளும் நடைபெறும்.

இரவு 8 மணிக்கு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் சொற்பொழிவும் தொடர்ந்து சுவாமி வீதிவலமும் இடம்பெறும்.(அ)

# ஆங்கில ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவு


(சித்தங்கேணி)

வலிகாமம் வலய ஆங்கில ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக திருமதி ஆர். பகவதியும் செயலாளராக டாக்டர் வெற்றிவேல் சக்திவேலும் உப தலைவராக திருமதி எஸ். பாலசுப்பிரமணியம், எம்.சிதம்பரநாதனும் உப செயலாளராக திருமதி பி. கேசவனும் பொருளாளராக திருமதி எஸ். ஜெயந்தனும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ்.இரவீந்திரன், திருமதி எஸ். மணிவண்ணன், எம்.ஹரிகரன், ஜெ.சுவர்ணா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-17)

# அரச திணைக்களங்களுக்கு சாரதிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)



பொது நிர்வாக அமைச்சினால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டிப் பயிற்சியில் சித்தியடைந்த 10 பேருக்கு சாரதி நியமனக் கடிதங்கள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் நேற்று சனிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் நியமனம் பெற்ற சாரதிகள் யாழ்ப்பாணம் , வவுனியா ஆகிய பிரதேசங்களில் உள்ள அரச திணைக்களங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் பொதுநிர்வாக அமைச்சின் பிரதி பிரதம செயலாளர் ஆர். துரைராஜா ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# த.வி.கூட்டணியின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கட்சியின் தலைமைச் செயலகத்தில் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்றைய அரசியல் நிலைமை பற்றிய கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவு கழகத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய அரங்கில் கழகத்தின் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

கனடாவைச் சேர்ந்த கைதடி நலன்விரும்பி ஒருவர் இந்த கற்றல உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதில் கைதடியிலுள்ள வளர்மதி சனசமூக நிலையம்,நவசனசமூக நிலையம்,கைதடி தெற்கு சனசமூக நிலையம்,சரஸ்வதி சனசமூக நிலையம்,செல்வா சனசமூக நிலையம்,நாவற்குழி சனசமூக நிலையம் மற்றும் உதயதாரகை சனசமூக நிலையம் ஆகியவற்றை சேர்ந்த மாணவர்கள் இந்த கற்றல் உபகரண நன்கொடையை பெற உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று பிரபாகரனுடன் மோதினோம் இன்று அமெ.வுடன் மோதுகின்றோம்

## உதயகம்மன்பில தெரிவிப்பு

சிங்களவர்களை போல் முஸ்லிம் தரப்பிலும் வன்முறைகள் ஏற்பட முஸ்லிம்கள் பரப்பிய வதந்திகள் காரணமாக அமைந்தது என மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் பள்ளிகளுக்கு தீமூட்டப்பட்டுள்ளன. பலர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக வதந்திகள் பரவின.சிங்கள பௌத்தர்களை தூண்டவே பொசன் பௌர்ணமி தினத்தில் பௌத்த பிக்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டது.பொதுபல சேனாவின் கூட்டம் முடிந்து அனைவரும் அமைதியாக கலைந்து செல்லும் போது கற்கள் மற்றும் பொல்லுகளால் தாக்குதல் நடத்தி பௌத்தர்களின் ஆத்திரத்தை தூண்டினர்.

இந்த நோக்கத்திலேயே புலிகள் அன்று அரந்தலாவவில் பிக்குகளை கொலை செய்தனர. அந்த நோக்கத்திலேயே மஹாபோதி மீதும் தலதா மாளிகை மீதும் தாக்குதல் நடத்தினர்.

எனினும் இந்த சம்பவங்களால் பௌத்த சிங்கள மக்கள் ஆத்திரமடையவில்லை. அவர்கள் புலிகளின் நோக்கத்தை அறிந்திருந்தனர்.யுத்தம் முடிந்து 5 வருடங்களில் எமது தந்திரங்கள் எமக்கு மறந்து போய் விட்டன.நாம் இன்னும் யுத்தம் செய்து கொண்டிருக்கின்றோம். அன்று நாம் வல்வெட்டித்துறையை சேர்ந்த இளைஞரான வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் மோதினோம்.

தற்போது உலகின் வல்லரசான அமெரிக்காவுடன் நாம் இன்று மோதிக்கொண்டிருக்கி றோம்.

நாம் சர்வதேசத்தினால் சுற்றிவளைப்பட்டிருக்கின்றோம் என்பதை முழு நாட்டு மக்களும் நினைவில் வைத்து கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# சிறைச்சாலைகளை புனர்வாழ்வு முகாம்களாக மாற்ற வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களிடம் காணப்படும் நல்லிணக்கம் சில அரசியல்வாதிகளிடம் இல்லை என்ற காரணத்தினால் முழு நாட்டுக்கும் பாதிப்பான அரசியல் அழுத்தங்கள் ஏற்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

கண்டி போகம்பர சிறைச்சாலையை அபிவிருத்தி பணிகளுக்காக அதிகார பூர்வமாக அரசாங்கத்திடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனால் முழு நாட்டுக்கும் பாதிப்பான அரசியல் அழுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்த அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தை தக்க வைத்து கொள்வதற்காக மட்டுமே சர்வதேசத்திற்கு சென்று நாட்டை காட்டிக் கொடுத்து வருகின்றனர்.

சிறைச்சாலைகளை நிரப்பும் தேவை அரசாங்கத்திற்கு இல்லை. சிறைச்சாலைகளை புனர்வாழ்வு முகாம்களாக மாற்ற வேண்டும் எனவும அவர் இதன்போது தெரிவித்தார். (அ)

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க தீர்மானம்?

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒரு வருடத்திற்கு ஒத்தி வைக்க அரசாங்கம் தீர்மானத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கத்தின் வாக்குகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டதே இந்த தீர்மானத்திற்கு காரணம் என கூறப்படுகின்றது. அரசாங்கத்தின் வாக்கு வங்கியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தினால் அதில் அரசாங்கம் வெற்றி பெறுவது சிரமமானது என்பதால் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

எனினும் இந்த உண்மையை மூடி மறைப்பதற்காக அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக தெரிய வருகின்றது. (அ)


**தேவை**

கட்டட நிர்மாண துறையில் தேர்ச்சி பெற்றவராயின் யாழ்/ முல்லைத்தீவு/ கொழும்பு/ தெஹிவளை/ களனி போன்ற பிரதேசங்களில் மேசன்/ தச்சு/ பெயின்டர்/ கம்பிபாஸ்/ செடலின் பாஸ் (1200/=,1500/=) கையுதவியாளர் (1000/= 1100/=) தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு:-
0775561883 (சி-7714)

**குறைந்த விலையில் உன்னதமான பயணம்**



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!
(சி-7712)

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

**வாடகைக்கு**

கிளிநொச்சி இரத்தினபுரம் பிரதான வீதியில் புதிய பாலத்துக்கு அருகாமையில சகல வசதிகளும் கூடிய 3 அறைகள் கொண்ட கல்வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-0725453865 (6795)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 62.5 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 6'4"<br>தகைமை/தொழில்: Technical College / தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர்<br>தொ.இ: B/3298 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 58 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, IT, GAQ - Following<br>தொ.இ: G/2124 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 28.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/3300 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 16<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, BSc – Following / வங்கியாளர்<br>தொ.இ: G/2128 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 37.75 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L / நிரந்தர அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: மணமகனிடம் வீடு உணடு,<br>தொ.இ: B/676 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 33.5 செவ் 1 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: கலைமானி / ஆசிரியர்<br>தொ.இ: G/2133 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 69.25 செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபார முகாமையாளர், முகவர்<br>தொ.இ: B/1071 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 30 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc / SLES Trainee<br>தொ.இ: G/2135 |


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

**S.K.AGGREGATION**

எமது சேவைகள்

01.திருமண மண்டபங்கள் ஒழுங்கமைத்து கொடுத்தல்
02. அனைத்து வகையான அலங்கார சேவை
03.அனைத்து வகையான வாகன வசதிகள்
04.சுற்றுலா ஒழுங்கமைப்பு
05.இயற்கை பூக்கொத்து ஒழுங்கமைத்து கொடுத்தல் (வொக்கேஸ்)
06.புகைப்பட சேவை (Photography & video)

T.P:- 0772216207, 0773943042
mail:- skaggregation.@gmail.com
(6917)

**நாளை (23.06.2014) சுழிபுரம்- பறாளாய்**
**ஈசுரவிநாயகரின் கொடியேற்றத் திருவிழா**

நேரம்-மு.ப. 11.00 மணியளவில்

"நம்பிக்கை கொண்டோர்க்கு தும்பிக்கையான் துணை"

சோழியூரான்
பிறை சூடிக் குரு
(6918)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு.தம்பையா கணேசு



மீசாலை வடக்கு வேம்பிராயை பிறப்பிடமாகவும் திருநகர் தெற்கை நிரந்தர வதிவிடமாகவும் இராமநாதபுரம் இணுவிலில் வசித்தவருமாகிய காலம் சென்ற தம்பையா- காசிப்பிள்ளையின் மூத்த மகனாகிய தம்பையா கணேசு அவர்கள் 19.06.2014 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் செல்லர் பரமேஸ்வரியின் அன்புக் கணவருமாவார். ம.பிறேமானந்தி (கிளி/கிளிநொச்சி ம.வி. ஆசிரியர்), க.பிறேமதாசன் (சுவிஸ்), க.மோகன் பிரபு (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், து. மகாராஜா (Janu Travels உரிமையாளர்), பி.சந்திரா ஆகியோரின் மாமனாரும் ம.ஜெயகொய்ஷன், ம.ரெரன்சியாஜானு, ம.றெறன்ஷன் (கிளி/கிளிநொச்சி ம.வி.), பி.ஹெஷிவா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இ.சற்குணம், த.சண்முகம் (மீசாலை), காலஞ்சென்ற த.தளையசிங்கம், இ.பூரணம் (உடுப்பிட்டி), த.சந்திரன் (திருநகர்) த.குலசிங்கம் (மீசாலை), த.யோகேஸ்வரன் (மீசாலை), த.நடேசு (பிரான்ஸ்), வ.திலகவதி, த.ஐயாத்தம்பி, ப.புஸ்பவதி, த.தயாபரன் (கருணா,இராமநாதபுரம்) ஆகியோரின் மூத்த சகோதரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 22.06.2014 இன்று அன்னாரின் வீட்டில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக காலை 10 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல.1111, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

## பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள்; அழைக்கிறது பொதுபலசேனா

(கொழும்பு)

அரசியலுக்கு வரும் நோக்கத்தில் நாடு மற்றும் இனத்திற்காக குரல் கொடுக்கவில்லை என பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பாரிய ஆபத்துக்கு மத்தியிலேயே தாம் இதனை மேற்கொண்டு வருவதாகவும் பொதுபல சேனாவின் பேஸ்புக் வலைத்தளகணக்கு தடை செய்யப்பட்டதால் மிகுந்த கவலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பிற்கு பின்னால் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாகவும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

அதேவேளை முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பகிரங்க விவாதத்திற்கு வந்து பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)


## நிரந்தர தொழில் வாய்ப்பு

நீங்கள் வேலைத்தேடிச் சிரமப்படுகின்றீர்களா? உங்கள் வேலைப் பிரச்சினையை தீர்க்க எம்மிடம் கை கோருங்கள். கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ பால்மா/ காமெண்ட்/ கிளவுஸ்/ PVC/ Paint.... போன்றவற்றில் உற்பத்தி / லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண்/ பெண் தேவை. சம்பளம் 18000/= 25000/= 35000/= நம்பிக்கை யூட்டும் வகையில் உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் (குழுக்கள்+ தம்பதியினர்+ நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைவாய்ப்பு.

(சி-7713) தொடர்புகளுக்கு:- 0776838231 .


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 250 |
| தக்காளி | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 150 | 140 |
| கரட் | 180 | 200 |
| பூசணி | 60 | 70 |
| புடோல் | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 70-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 |
| பீற்றூட் | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 160 |
| போஞ்சி | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 52

ராஜா தனு

கடன் தொல்லையால் அவதிப்பட்ட ஒருவன் மனைவி மற்றும் நான்கு குழந்தைகளுடன் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தான்.

தூக்குக்கயிறு,விஷம்,துப்பாக்கி,கத்தி போன்றவற்றை முன்னே வைத்துவிட்டு எதை வைத்து உயிரைப் போக்கிக்கொள்வது என்று குழப்பத்தில் இருந்தவனைப் பார்த்து கடைசிப்பையன் கேட்டான் "அப்பா சாவதற்கு இத்தனை வழி இருக்கும் போது பிழைப்பதற்கு ஒரு வழிஇருக்காதா?"

கீர்த்து கரன்




அஜந் குலசிங்கம்

ஒரு நாள் ஒரு கிளிக்கு திருமணம் செய்ய சுயம்வரம் நடத்தினாங்க...
காக்கா கிளிக்கு தாலி கட்டறப்ப...
"கல்யாணத்தை நிறுத்துங்க"ன்னு ஒரு குரல் கேட்டது...
திரும்பி பார்த்தால் பொலிஸ்...
பொலிஸ் காக்காவை அரெஸ்ட் பண்ணிட்டாங்க
ஏன்...? ஏன்...?
நினைவு இருக்கா?
ரெண்டாங் கிளாஸ் படிக்கறப்ப காக்கா, பாட்டியோட வடையை திருடிச்சே!!! அந்த குற்றத்துக்கு இப்ப அரெஸ்ட் பண்ணிட்டாங்க...
நீதி: "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

அற்புதராஜா முகேஷ்ராம்


ஒரு பையன் மேக்-அப் போட்டு கிளம்புனா கடைத்தெருவுக்கு போறான்னு அர்த்தம்...!



ஒரு பொண்ணு மேக்-அப் போட்டு கிளம்புனா யாரையோ நடுத்தெருவுக்கு அனுப்ப போறான்னு அர்த்தம்!!!

குலா ராஜ்

யாருய்யா நீ! இவ்வளவு நாள் எங்கய்யா இருந்த?



ராகுலன் ராகுல்

**காயப்படுத்த பலர் இருந்தாலும் மருந்தாக சிலர் இருப்பதாலேயே நம் வாழ்க்கை அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்கிறது.**

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம வன்முறை தொடர்பில் ஐ.நாவில் கேள்வியெழுப்பப்பட்டது

## பதிலறிக்கை சமர்ப்பித்தார் தூதுவர் மனிசா

அளுத்கம பிரதேசத்தில் கடந்த வாரம் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் குறித்து ஜெனீவாவில் நடந்துவரும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கேள்வி எழுப் பப்பட்டுள்ளது.

ஜேர்மனி, கனடா, நோர்வே ஆகிய நாடுகளே அளுத்கம வன முறைச் சம்பவம் தொடர்பாக கேள்வி எழுப்பின.

இதனையடுத்து, இலங்கை யின் ஜெனீவாவுக்கான பிரதி தூதுவர் மனிசா குணசேகர, பதில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கையில், இலங்கை அரசாங்கம் எந்தவொரு இன அல் லது மத வன்முறைகளையும் மன் னித்ததில்லை.

சம்பவம் தொடர்பான நம்பக மான தகவல்கள் திரட்டப்பட்டு, அரசாங்கம் பொருத்தமான நடவடி க்கையை மேற்கொள்ளும்.

எல்லா மதங்களினதும். வழி பாட்டு இடங்கள் மற்றும் சொத்து க்களினதும் பாதுகாப்பை இல ங்கை அரசாங்கம் உறுதிசெய்யும் என்று இந்த சபைக்கு உறுதிமொழி அளிக்கிறது.

இந்த வன்முறைகளில், 2 முஸ் லிம்கள் ஒரு தமிழர் என மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

6 பொலிஸார் உள்ளிட்ட 13 சிங்களவர்கள், 13 முஸ்லிம்கள் என 26 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இரு சமூகங்களினதும், 69 வீடுகள், 83 கடைகள், 11 வாக னங்கள் சேதமாக்கப்பட்டன.

தற்போது நிலைமைகள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு ள்ளதுடன், விசாரணைகள் நடத் தப்பட்டு வருகின்றன.

28 சிங்களவர்கள், 17 முஸ் லிம்கள் என 43 பேர் கைது செய் யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர் களில், 12 சிங்களவர்கள், 5 முஸ் லிம்கள் என 17 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, வன்முறைச் சம்பவங் களுக்கு பொறுப்பானவர்கள் மீது பாரபட்சமற்ற விசாரணை நடை பெறுமென அனைத்து சமூகங் களுக்கும் உறுதியளித்துள்ளார் என அவர் அங்கு மேலும் தெரி வித்துள்ளார். (அ)

# பாலுறவு தொடர்பிலான நோயாளர்கள் அதிகரிப்பு

பாலுறவு தொடர்பிலான நோயா ளர்களின் எண்ணிக்கை உயர் வடைந்துள்ளதாக பாலுறவு நோய் தடுப்புப் பிரிவு மற்றும் எச்.ஐ.வீ. தடுப்பு மத்திய நிலையம் அறி வித்துள்ளது.

சிபிலிஸ் என்னும் நோயே அதிகளவில் ஏற்படுவதாக பாலுறவு நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப் பாளர் டாக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணி தாய்மாரின் இரத்த பரிசோதனையின் போது இந்தத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கடந்த காலங்களை விடவும் 2013ஆம் ஆண்டில் சிபிலிஸ் என் னும் நோயினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களின் எண் ணிக்கை இரட்டிப்பாக உயர்வடை ந்துள்ளது.

இதனால் சகல கர்ப்பிணித் தாய்மார்களையும் பாலுறவு தொட ர்பிலான நோய்கள் தொடர்பில் சோதனையிட திட்டமொன்று வகுக் கப்பட்டுள்ளது என அவர் தெரி வித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி தேர்தலுக்கு பொது வேட்பாளர் இல்லை?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர்கள் நிறுத்தப்பட மாட்டார்கள் என தகவல்கள் தெரி விக்கின்றன.

பொது வேட்பாளராக போட்டியிட மாதுளுவாவே சோபித தேரர் விரு ப்பம் வெளியிட்டுள்ள போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் "எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு" அமை ப்பில் இணைந்துள்ள அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவு வழங் காது என அந்த தகவல்கள் மேலும் குறிப்பிட்டன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்ற கோஷத் துடன் எதிர்க்கட்சிகளின் தலை வர்கள் அண்மைய காலங்களில் பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் னதாக ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ, நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்வதாக அறிவித்தால், எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரம் பாதிக்கப்படும் என எதிர்க் கட்சி களின் முக்கிய தலைவர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சி தனியான வேட்பாளரை நிறுத்த வேண்டும் என அந்த கட்சிகளின் தலைவர்கள் கருதுவதாக கூறப் படுகிறது.

இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதை ஆதரிப்பதாக தெரியவருகிறது.

அதேவேளை ஜே.வி.பி, இடது சாரிகள் மற்றும் முற்போக்கு சக்தி களுடன் கூட்டணியை அமைக்க தயாராகி வருவதாகவும் பேசப் படுகிறது.

இது குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டுள்ளதாக ஜே.வி. பியுடன் பேச்சுவார்த்தைகளை நட த்திய அரசியல் கட்சிகளின் தலை வர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# மனிதக் கடத்தல் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கம்

(கொழும்பு)

அமெரிக்காவின் மனிதக் கடத் தல் டையர் 2 பட்டியலில் இலங் கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக் களத்தினால் இந்த பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

வியட்நாம் பாதுகாப்பு சட்டத் தின் கீழ் சாட்சி பாதுகாப்பு மற்றும் புறக்கணிப்புகள் தொடர்பாக உரிய நடைமுறைகளை கொண்டிராத நாடுகளை இந்த பட்டியல் கொண் டிருக்கிறது.

இந்தநிலையில் குறித்த நாடு கள் மனிதக் கடத்தலை தடுக்கக் கூடியவாறான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண் டும் என்று அமெரிக்க அறிக்கை யில் கோரப்பட்டுள்ளது.

எனவே இலங்கையை பொறுத் தவரை, மனிதக்கடத்தல் நடவடிக் கைகள் குறித்து அந்த நாடு உரிய விசாரணைகளை நடத்த வேண் டும். அந்த நடவடிக்கைகளை முனனேற்றமடைய செய்ய வேண் டும்.

அத்துடன் மனித கடத்தல்களை தடுககும் வழிகளை ஆராய வேண டும் என்றும் அமெரிக்கா கோரி யுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட் டோரை பாதுகாக்கும் நடை முறைகள் பின்பற்றப்பட வேண் டும்.

அதேநேரம் மனிதக் கடத்த லுக்கு உதவி செய்யும் அரசாங்க அதிகாரிகள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இதேவேளை 2014 ஆம் ஆணடு மனிதக் கடத்தல் தொடர்பான அமெரிக்க அறிக்கையின்படி, இலங் கையின் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்றோர் தொழிலாளர் என்ற வகுதிக்காக வும் பாலியல் தொழிலுக்காகவும் கடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டி ருந்ததாகவும் குறிப்பிடப்படுகின் றது. (அ)

# தலிபான்களை இலங்கையில் ஊக்குவிக்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

தலிபான்களை இலங்கையில் ஊக்குவிக்க அமெரிக்கா முனை வதாக ஜாதிக ஹெல உறுமயவின் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரண வக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய் தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், முன்னதாக தலிபான்களை அமெரிக்கா ஊக்குவித்தது.

இது பின்னர் அமெரிக்காவுக்கே ஆபத்தாக அமைந்தது.

இதேபோன்று தற்போது அமெ ரிக்காவுக்கான இலங்கை தூதர் மிச்செல் சிசன் இலங்கையில் தலிபான்களை ஊக்குவித்து வரு கிறார்.

இது இலங்கைக்கு மாத்திரம் அல்ல, முழு உலகத்துக்கும் ஆபத் தாக அமையப் போகிறது.

ஆப்கானிஸ்தானில் செய்த அதே தவறையே அமெரிக்கா, அளுத் கம விடயத்தில் செய்கின்றது.

அளுத்கமயில் உள்ள முஸ்லிம் குழுக்களை கொண்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத் துக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்கா ஊக்குவிக்க முனைகி றது.

இந்தநிலையில் இலங்கையின் படையினர் அளுத்கமயில் ஆயி ரக்கணக்கான முஸ்லிம் இளை ஞர்களை ஒன்றுகூட அனுமதித் தனர்.

எனினும் அங்கு சிங்களவர்கள் பேரணியை நடத்த அனுமதிக்க வில்லை என்று அவர் குற்றம் சுமத்தினார். (அ)

# பிரிவுத்துயர் பகிர்வு



### பொன்னுத்துரை பத்மநாதன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, கல்வியங்காட்டையும் தற்போது முத்தட்டு மட வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பத்மநாதன் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சடாட்சரம் நவமணி



கொடிகாமம் கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சடாட்சரம் நவமணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடிகாமம் கச்சாய் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பாலா வித்தாள் இந்து மயானத்தில்தகனம் செய்யப்படும்.



### நாகலிங்கம் ஜெயகுமார்

யாழ்.மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, டென்மார்க், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெயகுமார் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு South london Crematorium, Rowan Road, Streatham SW16 5JG, United Kingdom என்னும் முகவரியில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### தம்பையா கணேசன்



மீசாலை வேம்பிராயைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இல.1111 திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கணேசன் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று கிளிநொச்சியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கிளிநொச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### உருத்திரா கனகரட்ணம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரா கனகரட்ணம் கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்



சாவகச்சேரி மடத்தடியைப் பிற்ப்பிடமாகவும் சாவகச்சேரி கெருடாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பூதன் சின்னத்துரை

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூதன் சின்னத்துரை கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாகும் சமந்தா!

நடித்த சில படங்களிலேயே தமிழ் சினிமாவின் உச்சத்தை தொட்டவர் சிவகார்த்திகேயன். தற்போது. எதிர்நீச்சல் படத்தை இயக்கிய துரை செந்திலே அடுத்து இவரை வைத்து டாணா என்ற படத்தையும் இயக்கி வருகிறார்.

இதில் இவருக்கு ஜோடியாக ஸ்ரீ திவ்யா நடிக்கிறார். இதை தொடர்ந்து சிவா திருப்பதி பிரதர்ஸ் நிறுவனத்திற்காக ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். இதை வருத்தப்படாத வாலிபர்சங்கம் இயக்குநர் பொன்ராம் தான் இயக்கயிருக்கிறார்.

இப்படத்தில் இவருக்கு ஜோடியாக நடிக்க சமந்தாவிடம் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




## தாதாக்களை வைத்து மிரட்டும் ப்ரீத்தி ஜிந்தா; அதிர்ச்சியில் காதலன்!

பாலிவுட்டில் சில வருடங்களுக்கு முன்வரை நம்பர் 1 நடிகையாக இருந்தவர் ப்ரீத்தி ஜிந்தா. கிரிக்கெட் மீது கொண்ட ஆர்வத்தால் சினிமாவுக்கு முழுக்கு போட்டு விட்டு ஐபில்லில் பஞ்சாப் அணியை வாங்கி வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

சில நாட்களுக்கு முன் இவர். தன் முனனாள் காதலர் நெஸ் வாடியா தன்னை பாலியல் தொந்தரவு கொடுத்ததாக பொலிஸில் புகார் கொடுத்தார். ஆனால் இது உண்மை இல்லை என்று நெஸ் வாடியா மறுக்க. பொலிஸார் விசாரணையிலும் அப்படி ஏதும் நடக்கவில்லை என்று தெரிய வந்தது.

இது குறித்து சமீபததில் நெஸ் வாடியா கொடுத்த பேட்டியில் 'ப்ரீத்தி ஜிந்தா சம்பந்தப்பட்ட அனைத்து தொழில் நிறுவனங்களில் இருந்தும் என்னை விலகிக் கொள்ளுமாறு தாதாக்களை வைத்து மிரட்டுகிறார் என்று தெரிவித்துள்ளார். மேலும் நெஸ் வாடியாவின் தந்தையும் 'பாம்பே டையிங்' தொழில் அதிபருமான நுஸ்லி வாடியாவுக்கும் போனில் தாதாக்கள் மிரட்டல் விடுத்ததாகவும் கூறியுள்ளார்.



## முண்டாசுப்பட்டி – திரைவிமர்சனம்



கிராமத்துல இருக்கிற எல்லாரும் முண்டாசுகட்டி இருக்கிறதால படத்துக்குப் பேரு "முண்டா சுப்பட்டி"யாம். கற்பனையான ஒரு கிராமத்துல நடக்கிற அதி கற்பனையான ஒரு விடயம்தான் படத்தோட கதை.

தலைக்கு உள்ள சில பல சுவாரசியமான விடயங்களை யோசிச்ச இயக்குநர் ராம் குமார் தலைக்கு வெளிய இருக்கிற தலை முடியைப் பத்தி கொஞ்சம் கூட யோசிக்கலை. அவனவன் அமெரிக்காவுல இருந்து மேக்கப் மேனையும். ஹேர் டிரஸ்ஸரையும் கூட்டிட்டு வந்து அப்படியே யதார்த்தமா இருக்கிற மாதிரி கெட்-அப்பையே மாத்தறாங்க. இவங்க என்னடான்னா. ஆதி கால சினிமாவுல பயன்படுத்தின அதே "விக்"கை எடுத்து மாட்டிக்கிட்டு ஃபேன்சி டிரஸ் காம்படி ஷன் நடத்தியிருக்காங்க.

1980-கள்னா ஒண்ணு இளையராஜா பாட்டு பின்னணியில பாடணும். இல்லை பெல்பாட்டம் பேண்ட் போடணும். ஸ்டெப் கட்டிங் தலை முடி இருக்கணும்னு இதுதான் இவங்களுக்குத் தெரிஞ்சது போல. ஆனால். அதையும் மீறி உணர்வுன்னு ஒரு விடயம் இருக்கிறது இவங்க கண்ணுக்குலாம் தெரியலை.

ஒரு காலத்துல முண்டாசுபட்டி கிராமத்துல ஒரு வெள்ளைக் காரன் வந்து போட்டோ புடிச்சதாலதான் கிராமத்துல இருக்கிற பலர் வித்தியாசமான நோய் வந்து இறக்கறாங்கன்னு ஒரு பீதி. அப்ப எங்க இருந்தோ வந்து விழுற ஒரு எரி கல். அப்படியே கரெக்டா அவங்க கிராமத்து கோயில்ல போயி செட் ஆகிடுது. அந்த சாமி தான் இவங்கள காப்பாத்துனதா நினைச்சி அந்த ஊர்ல இருக்கிற யாருமே போட்டோ எடுத்துக்கறதில்லை. அப்படி போட்டோ எடுத்தால் அவங்களுக்கு ஆயுசு முடிஞ்சிடும்னு ஒரு நெனப்பு.

இப்படிப்பட்ட கிராமத்துக்கு இறந்து போன ஊர் பெருசை போட்டோ எடுக்க போட்டோகிராபரான விஷ்ணு விஷால் அவர் உதவியாளர் காளி வெங்கட்டோட ஊருக்குள்ள வர்றாரு. அப்புறம் என்ன வழக்கம் போல ஊர் பெரிய மனுஷர் மகளான நந்திதாவைக் காதலிக்கிறாரு. அப்புறம் எப்படி ஊர் மனசை மாத்தறாருங்கறதுதான் படத்தோட கதை.

படத்துல இருக்கிற ஒரு பெரிய ஆறுதலே தேவையில்லாத காதல் காட்சிகள். காதல் பாடல்கள். முட்டல் மோதல் இப்படி எதுவும் இல்லாததுதான். அதே சமயம் அதுவே ஒரு மைனஸ் பாயின்டாவும் ஆயிடுது. முழுக்க முழுக்க ஒரு நகைச்சுவைக் கதையில காதலுக்குலாம் கூட பெரிய முக்கியத்துவம் கொடுத்த மாதிரி தெரியலை. மூடநம்பிக்கையை எதிர்க்கறோம்னு உஷாரா ஃபிராடா இருக்கிற மத்தவங்க மேலயும். பல்லி மேலயும் காட்சிகளை வச்சி எதுக்கு வம்புன்னு தப்பிச்சிக்கறாங்க.

விஷ்ணு விஷால். அவருக்குக் கொஞ்சமும் பொருந்தாத ஒரு விக். பொருத்தமில்லாத ஒரு பேண்ட். சட்டையோட முடிஞ்சவரைக்கும் முட்டி மோதி பார்த்திருக்காரு. டயலாக் டெலிவரியை நிதானமா சொல்லி புரியற மாதிரி பேசறதுல கொஞ்சம் தப்பிச்சிக்கிறாரு. அதுலயும். சத்த மேயில்லாம நந்திதாவை சைட் அடிக்கிறதுல சான்ஸே இல்லை. ஆனாலும். நடிப்புத் திறமையை கொடடறதுக்கு படத்துல எந்த காட்சியும் இல்லை.


"அட்டகத்தி" நந்திதா. முண்டாசுபட்டி கிராமத்தோட ஊர் பெரிய மனிதரோட ஒரே செல்லப் பொண்ணு. அப்புறம் கேக்கணுமா. கண்டிப்பா ஹீரோவைத்தான் லவ் பண்ணும். நீலம். சிகப்பு. பச்சை கலர்ல பாவாடை தாவணி. காமாட்சி டாலர் செயின் இதுதான் 80களோட ஹீரோயின் தோற்றம்னு இயக்குனர் ஃபிக்ஸ் ஆகிட்டாப்ல. என்ன பண்றது. ஆனாலும். நந்திதாவுக்கு இந்த கதாபாத்திரமும் அழகு. இப்படி நல்லா நடிக்கிற பொண்ணை அப்படியே சும்மா பார்க்கிறதுலயும். நடக்கிறதுலயும் மட்டுமே விட்டுட்டாரு இயக்குனர்.

படத்தோட கலகலப்புக்கு ரெண்டு பேர் உத்தரவாதம். ஒண்ணு காளி வெங்கட். இன்னொண்ணு ராமதாஸ். காளி வெங்கட். விஷ்ணுவோட உதவியாளர் அப்பப்ப சரியான சமயத்துல சரியா பேசி கொஞ்சம் சிரிக்க வைக்கிறாரு. ஆனாலும். நகைச்சு வையில இவரை ஓவர் டேக் பண்ணிடறாரு ராமதாஸ். சினிமா ஆசையில முனீஷ்காந்த்-னு பேரை வச்சிக்கிட்டு கிராமத்துல இவர் பண்ற அட்டூழியம்



அப்பப்ப கொஞ்சம் பொறுமைய சோதிச்சாலும் சில காட்சிகள்ல சிரிக்க வைக்குது.

முண்டாசுப்பட்டி - வண்ணக் காலத்தில் ஒரு கறுப்பு வெள்ளை!




## அஜித்தை பின்னுக்கு தள்ளிய விஜய்




தமிழில் வெளிவரும் வார இதழ் ஒன்று தமிழ் சினிமாவில் அடுத்த சூப்பர் ஸ்டார் யார் என்று ஒரு கணக்கெடுப்பு நடத்தியுள்ளது.

தற்போது அவ்வார இதழ் கணக்கெடுப்பின் முடிவை வெளியிட்டுள்ளது. அதில் விஜய் 12.80.300 வாக்குப்பதிவுகளை கொண்டு முன்னிலையில் உள்ளார். அஜீத் 12.17. 650 வாக்குப்பதிவுகளை கொண்டு இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார்.

மேலும் சூர்யா (5.47.050)மூன்றாம் இடத்திலும். தனுஷ் (1.58.900) நான்காம் இடத்தையும் பிடித்துள்ளார்.

## அந்த நாள் ஞாபகம்



[illegible] ஆலோசனை : அரசியல் நிலவரம் குறித்த ஆலோசனையில் சிவாஜி. ராஜாஜி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைச் சம்பவத்தில் 580 கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிவு

## 8 பேர் பலி; சபையில் விபரித்தார் அஸ்லம் எம்.பி

(கொழும்பு)

அளுத்கம வன்செயல் காரணமாக 8 பேர் பலி, 170 பேர் காயம், 580 கோடி பெறுமதியான சொத்து இழப்பு, 150 வீடுகள் அழிப்பு, 2 ஆயிரத்து 450 பேர் இடம்பெயர்வு, பள்ளிவாசல்கள் மீது தாக்குதல், ஆயிரம் பேர் தொழில்வாய்ப்பு இழப்பு, 272 கால்நடைகள் கொலை, 86 கொள்ளைச் சம்பவங்கள். இவ்வாறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான மொஹமட் அஸ்லம் தகவல் வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் மேற்படி தகவல் வெளியிட்ட அவர் வன்முறை சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் அரசாங்கம் நட்ட ஈட்டினை வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அளுத்கமவில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் நாம் எமது கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த சம்பவமானது கண்டனத்துக்கு உரியதாகும். சமாதானத்தை பாதுகாக்கும் பொலிஸார் உரிய வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தார்களேயானால் இத்தகைய அழிவுகளும் இழப்புக்களும் ஏற்பட்டிராது.

இச் சம்பவத்தில் தமிழர் ஒருவர் உட்பட நான்கு பேர் படுகொலை செய்யப்பட்ட அதேவேளை மேலும் நான்கு பேர் சம்பவம் தொடர்பான அதிர்ச்சியால் மாரடைத்து மரணமாகினர்.

ஆகவே இதனை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். அத்துடன் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய வகையிலான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதான சூழல் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்ற நிலையில் நடந்தேறியுள்ள சம்பவமானது மீண்டும் பழைய நிலைக்கு இழுத்துச் செல்லும் ஒரு செயற்பாடாகவே அமைந்திருக்கின்றது.

இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கக் கூடாது. இச்சம்பவத்தின் காரணரான பொதுபல சேனாவே பொதுச் செயலாளரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதுடன் இவ்வாறான சம்பவங்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்றும் இந்த இடத்திலே கோரிக்கை வைக்கின்றேன்.

ஏனெனில் முஸ்லிம்களாகிய நாங்கள் பாகிஸ்தானில் பிறக்கவில்லை. ஆப்கானிஸ்தான் எம்மை ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பாதுகாப்பு தரப்பினரே அளுத்கம தாக்குதலுக்கு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர். ஆகவே இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ)

## மெய்வல்லுநர் விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசாசன சமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மை போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுமென முன்பள்ளி அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக திருமதி பத்மலோஜினி சந்திரபாலன் (ஜே.பி), வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தம்பிராசா திருநாவுக்கரசு, பொன்னையா சிதம்பரநாதன், ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் கனகசபாபதி கனகநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் (அ)








உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலையின் விளையாட்டுவிழா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது மாணவர்களின் பாண்ட் வாத்தியங்களுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதையும் மாணவ்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உடுப்பிட்டி செய்தியாளர்)

## மஹோற்சவம்

சித்தன்கேணி தனுவோடைபதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு பஞ்சரத பவனியும் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அமிர்தபுஷ்பகரணியில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் முற்பகல் 11 மணிக்கும் மாலை 7 மணிக்கும் வசந்த மண்டபப் பூஜை நடைபெறும்.

◆ ◆ ◆ ◆ ◆

யாழ்ப்பாணம்-ஆவரங்கால் பர்வத வர்த்தனி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் இரவு 6 மணி தொடக்கம் 7 மணிவரை சமய சொற்பொழிவு நடைபெற்றும். (அ)

## வேலணை மத்திய கல்லூரியில் கல்வி மேம்பாட்டு ஆய்வுக்களம்

யா/வேலணை மத்திய கல்லூரியின் முகாமைத்துவக் குழுவினால் நடத்தப்படும் கல்வி மேம்பாடு தொடர்பான மாணவர் ஆய்வுக்களம் எனும் தொனிப்பொருளில் நடத்தப்படும் முதலாவது மேம்பாட்டு ஆய்வுக்களம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் அமரர் அதிபர் ஏ.கே.கந்தையா அரங்கில் தேசிய கல்வி நிறுவன பட்டப்பின் கல்விக்கான யாழ்.பிராந்திய இணைப்பாளர் திருமதி. தனலட்சுமி வில்வநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை வேலணை மத்திய கல்லூரி அதிபர் சிவசாமி கிருபாகரனும் முன்மொழி உரையை தீவக உதவிக்கல்விப் பணிப்பாளர் ப.ஆரூரனும் வழிகாட்டுநர் உரையை வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.வேதநாயகி பேரின்பநாதன், அவதானிப்பாளர் உரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி தலைவர் ச.அமிர்தலிங்கம், அரங்குப் பொறுப்பாளர் உரையை வேலணை மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர் பொ.ஜெகதீஸ்வரன், மதீப்பீட்டாளர் உரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு ஆகியோர் வழங்குவர்.

இதில் 19 விடயத் தலைப்புக்கள் ஆய்வு செய்யப்படவுள்ளன. ஆர்வலர்களை பங்குபற்றுமாறு வேலணை மத்திய கல்லூரி முகாமைத்துவ குழு கேட்டுள்ளது. (அ)

### ஜனாதிபதி நாட்டில் இல்லாத போது

## பொறுப்பை நிறைவேற்ற தகுதியான பிரதமர் தேவை

ஜனாதிபதி இல்லாத போது, முழுமையான பொறுப்பையும் கையேற்று செயற்படக் கூடிய தகுதி வாய்ந்த பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி லிபரல் கட்சி அறிக்கை ஒனறை வெளியிட்டுள்ளது

அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதக் குழுக்கள் நடத்தப்பட்ட தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. அது குறித்து சரியான தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய நிலைமை கூட நாட்டு மக்களுக்கு காணப்படவில்லை.

இந்த துரதிஷ்டவசமான சம்பவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லாத நிலையிலேயே ஏற்பட்டிருந்தது. தேடிப் பார்க்கும் போது, அரசாங்க அதிகாரிகள் உரிய வகையில் தங்களின் கடமைகளை மேற்கொள்ளாமையும், அந்த அதிகாரிகளுக்கான உத்தரவுகள் மேலிடத்தில் இருந்து பிறப்பிக்கப்படாமையுமே காரணமாக இருக்கிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி நாட்டில் இல்லாத போது, அவரின் கடமையை சரியாக செய்வதற்கு, நாட்டின் அசாதாரண நிலைமைகளை கட்டுப்படுத்தும் உத்தரவுகளை பிறப்பிக்கவும் தகுதி வாய்ந்த பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று லிபரல் கட்சி வலியுறுத்தியுள்ளது. (அ)

## உள்நாட்டு செயற்பாட்டின் மூலம் ஜனநாயகத்தை உருவாக்கலாம் ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டு

சர்வதேச நாடுகளின் தலையீட்டில் உருவாகின்ற ஜனநாயக மாற்றங்களைவிட, உள்நாட்டு செயற்பாடுகளால் உருவாகின்ற ஜனநாயகத்துக்கு பெறுமதி அதிகம் என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கை அரசாங்கம் இதனை திறம்பட மேற்கொள்ளுமா? என்பதே இங்கு கேள்விக்குறியாக இருப்பதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. யுத்தம் நிறைவடைந்த பின்னர் அரசாங்கம் சுமூகமான சூழ்நிலை ஒன்றை உருவாக்கி இருக்க வேண்டும்.

அத்துடன் இலங்கையில் திட்டமிடப்பட்ட ஜனநாயக அபிவிருத்திக்கு வழிவிடும் வகையில் அரசாங்கம் செயற்பட்டிருக்க வேண்டும். மேலும் சட்ட ஒழுங்குகளும், நீதியும் நிலைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தோல்வி அடைந்துள்ள நிலையில், சர்வதேச நாடுகளின் தலையீட்டை தவிர்க்க முடியாது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (அ)

## அளுத்கம வன்முறை தொடர்பில் அமெ.வுக்கு விளக்கினார் ஹக்கீம்

(கொழும்பு)



நாட்டுக்குள் காணப்படும் மோதலான நிலைமையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நடத்தப்பட்ட ஹர்த்தாலை அமைதியான முறையில் நடத்தியமையை பாராட்டுவதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்கள் தொடர்பான உதவி இராஜாங்க செயலாளர் ஒஸ்கார் பேர்டினேண்டிஸ் ட்ரான் கோவை தனது அமைச்சில் சந்தித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ஹக்கீம் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மாவனல்லை நீதிமன்ற வளாகத்தில் இரண்டு பொலிஸார் மீது திராவகம் வீசப்பட்டமை மற்றும் வட்டரெக்க விஜித தேரர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பன சட்டத்தின் ஆதிக்கம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள்.


இந்த சம்பவங்கள் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம்.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் அண்மையில் நடந்த சம்பவங்கள் மற்றும் அதனுடன சம்பந் தப்பட்ட தரப்பினர் குறித்தும் அமெரிக்க பிரதிநிதிக்கு விளக்கியதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எனக்கு ஓர் அடையாளம்!



சைக்கிளை மிதித்து, பள்ளியை அடைந்தாள் ப்ரியா. முதல்நாள் என்பதால் விருப்பமில்லாமல் வகுப்பில் விட்டுச் செல்லப்பட்ட குட்டி வாண்டுகள், நண்பர்களிடம் விடுமுறைக் கதைகளைப் பேசக் காத்திருக்கும் பெரிய வாண்டுகள் என்று பள்ளி கலகலப்புடன் இருந்தது.

இதேபோன்ற முதல் தினத்தை 10 வருடங்களாகப் பார்த்து வருகிறாள். ப்ரியா. இந்தமுறை எப்போதுமில்லாத ஒருவித பயம்.

பத்தாம் வகுப்பு ரிசல்ட் வந்த பிறகு அட்மிஷன் அறையில்... "நம்ம ஸ்கூல் ஸ்டுடன்ட்தானே? எந்த குறூப் எடுக்கப்போற?" என்று கேட்டார் பிரின்சி.

"கம்ப்யூ..." அவள் முடிக்கும் முன்னரே. "காமர்ஸ் மேம்" பளிச் சென்று சொன்னார் அம்மா.

அமைதியாக நின்றாள் ப்ரியா. அதற்குச் சில தினங்களுக்கு முன்னர், "நான் காமர்ஸ் படிக்க மாடடேன்" என்று அழுத்தமாகச் சொல்லி இருந்தாள்.

"நீயோ இலக்கியம்தான் படிக்கணுங்கிறே... அப்புறம் எதுக்குத் கம்ப்யூட்டர் சயின்ஸ்? அம்மா சொல்ற மாதிரி காமர்ஸ் எடுத்து டென்ஷன் இல்லாமப் படி" - இது அண்ணன்.

"நோ! என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாருமே சயின்ஸ் குறூப்தான். நானும் அதைத்தான் எடுப்பேன்."

"என்னமோ பண்ணு போ!"

வாதத்தில் ஜெயித்துவிட்டதாக அன்று எண்ணினாள் ப்ரியா. ஆனால், இப்போது அவள் ப்ளஸ் ஒன் காமர்ஸ் மாணவி.

வகுப்பு அறையில் நுழைந்தவுடன் பரீச்சயமான முகங்களுக்காகக் கண்கள் ஸ்கேன் செய்தன. அவளது '10பி' கேங்'கிலிருந்து லக்ஷா மட்டும்தான் இருந்தாள். தாததாவும் அப்பாவும் ஆடிட்டர் என்ற பின்னணி கொண்ட லக்ஷா, சி.ஏ. படிக்க ஆசைப்படுவதில் ஆச்சரியமில்லை.

"ஹைய்... வாட்ஸப்?" என்றபடி லக்ஷா அருகில் சென்று அமர்ந்தாள் ப்ரியா.

"வந்த உடனே ஆரம்பிச்சுட்டா இங்கிலீஷ்ல. ஆண்டவா, இந்த லிட்ரேச்சர் ஸ்டுடன்ட்கிட்ட இருந்து நீதான் என்னைக் காப்பாத்தணும்!" என்று கலாய்த்தாள் லக்ஷா.

சற்றே கடுமையான முகத்தை புன்சிரிப்பால் மறைத்தபடியே நுழைந்தார் ஓர் ஆசிரியர். முகத்தின் சுருக்கங்கள் அவரது அனுபவத்தைச் சொன்னது. "உங்களை அறிமுகப் படுத்திக்கோங்க" என்றார்.

முதல் மாணவன், "ஐயம் கிருஷ்ணா!" என்று சொல்லிவிட்டு இருகையில் அமர்ந்தான்.

"உங்க பெயர், உங்களைக் கூபபிட ஒரு முகவரி அவ்வளவுதான். அறிமுகம்னா உங்களை அடையாளப்படுத்தணும். வாழ்க்கை முழுதும் மத்தவங்க உங்க பெயரை மட்டுமே அடையாளமாச் சொன்னா, நீங்க ஒரு தோல்வியாளர். ஒருவர் உங்களைப் பற்றிப் பேசும்போது, "இந்த விஷயத்தைச் செய்தாரே அவர்தான்' என்று அடையாளம் காட்டுகிற மாதிரி எதையாவது சாதிக்கணும். இப்போ மறுபடியும் ஆரம்பிங்க" படபடவென்று பேசி முடித்தார் ஆசிரியர்.

"கால் மீ கிருஷ்ணா. நான் இத்தனை நாளா ஸ்டேன்ஃபோர்ட் ஸ்கூல்ல டீச்சர்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டிருந்தேன். இங்கேயும் தொடரலாம்னு நினைச்சேன். மனசு மாறிடுச்சு. இப்போதே ஒரு சார்ட்டர்டு அக்கவுன்டன்ட் போல் ஃபீல் பண்றேன்" சொல்லி முடித்தான் அவன்.

"வெளிப்படையான பேச்சு" எனறு பாராட்டுப் பெற்றான். வரிசையாக எல்லா மாணவர்களும் தங்களுக்கு என்று ஓர் அடையாளத்தைப் பதிவு செய்தனர்.

"நெக்ஸ்ட் ப்ளீஸ்"

ப்ரியாவின் முறை. "என் பேரு ப்ரியா. நான் 10ஆவது வரைக்கும் இதே ஸ்கூல்லதான் படிச்சேன். நான் ஃப்யூச்சர்ல..." தொண்டை அடைத்தது. தொடர்ந்து அவளால் பேச முடியவில்லை. கூர்மையான கண்கள் பல அவளைத் துளைத்தன.

"நீங்க வருங்காலத்துல என்ன பண்ணப்போறோம்னு ப்ளஸ் ஒன் வந்தும் முடிவு பண்ணலைனா, ரொம்பக் கஷ்டப்பட வேண்டி இருக்கும்" ஒருவித வெறுப்புடன் சொன்னார் ஆசிரியர்.

பள்ளியில் இருந்து வீடு திரும்பும் வழியில் மீண்டும் ஒரு ஃப்ளாஷ்பேக்...

2007- ஃபேஷன் டிசைனிங், 2008-சயின்ஸ், 2009- ஆங்கில இலக்கியம், 2010-ஜர்னலிஸம், 2011- மறுபடியும் ஆங்கில இலக்கியம்...

"எல்லாரும் லட்சியத்தை அடையப் பல வருஷம் ப்ாடுபடுவாங்க. நீ லட்சியத்தை நிர்ணயிக்கவே பல வருஷம் ஆயிருச்சு."

இதுபோன்ற விமர்சனங்கள் அவளுக்குப் புதிதல்ல. அவள் பயணிக்கத் தேர்ந்தெடுத்த இலக்கிய வீதியில், இத்தனை தடைகள் இருக்கும் என எதிர்பார்க்கவுமில்லை. பலரும், "சாதாரண ஸ்கூல்ல எட்டாங்கிளாஸ் டீச்சரா குப்பை கொட்டலாம். வேறென்ன செய்ய முடியும் உன் லிட்ரேச்சரை வெச்சு?" என்றுதான் பேசினர்.

அன்று முடிவுசெய்தாள்... எவரிடமும் தன் கனவைப் பகிர்ந்து கொள்வது இல்லை என்று.

மறுநாள் பள்ளியில் அதே ஆசிரியர், "என்னம்மா, உனக்கு லட்சியமே கிடையாதா? இல்லை... சொல்ல விரும்பலையா?" என்று கேட்டார்.

தலைகுனிந்தபடி மௌனம் காத்தாள் ப்ரியா. "பேசு, இல்லாட்டி நான் க்ளாஸ் எடுக்க ஆரம்பிக்கிறேன்." என்றார்.

"ஸாரி சார், நான் சி.ஏ. படிக்க காமர்ஸ் குறூப் எடுக்கலை. சயின்ஸ்லயும் எனக்கு ஆர்வம் இல்லை. நான் ஆங்கில இலக்கியம் படிக்கணும். ஆனா, இந்த விஷயத்துல என்னை ஆதரிக்கிறவங்களை விட கிண்டல் பண்றவங்கதான் அதிகம். ஒரு கட்டத்தில் அவர்களோட எதிர்மறைப் பேச்சுக்களால் நான் எடுத்த முடிவு தப்போனு என் மேல எனக்கே சந்தேகம் வர்ற அளவுக்கு ஆயிட்டேன். அதற்குப் பிறகு, என் மேற்படிப்புப் பற்றி யாரிடமும் பேசுவது இல்லை. எந்தப் படிப்புக்குமே அதற்கென்று ஒரு துறையில் மதிப்பும் உண்டு. அதை அடையும் வரையில் அமைதியா செயல்பட்டு ஜெயிச்சுக் காட்ட முடிவு பண்ணியிருக்கேன" என்று முடித்தாள் ப்ரியா.

மற்ற மாணவர்களைவிட மனதளவில் தெளிவுடன் இருந்த ப்ரியாவை பெருமிதச் சிரிப்புடன் பார்த்தார் ஆசிரியர்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 06.2014 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1593 - குரொவெசியர்கள் சிசாக் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் துருக்கியர்களை வென்றனர்.
- 1633 - அண்டத்தின் மையம் பூமியல்ல, சூரியன் என்ற தனது அறிவியல் கொள்கையை கலிலியோ கலிலி உரோமின் அரசுப்படைகளின் வற்புறுத்தலின் பேரில் திரும்பப் பெற்றுக் கொண்டார்.
- 1658 - போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.
- 1783 - ஐஸ்லாந்தின் லாக்கி எரிமலையிலிருந்து வெளியேற்றிய நச்சுவாயு பிரான்சின் லஹாவ்ரா நகரைத் தாக்கியது.
- 1812 - முதலாம் நெப்போலியன் ரஷ்யாவின் மீது போரை அறிவித்து முற்றுகையிட்டான்.
- 1815 - நெப்போலியன் பொனபார்ட் இரண்டாம் தடவையாக பதவியிழந்தான். 4 வயதான இரண்டாம் நெப்போலியன் இரண்டு வாரங்களுக்கு ஆட்சியிலமர்ந்தான்.
- 1825 - பிரித்தானிய நாடாளுமன்றம் நிலமானிய முறையை நீக்கியது.
- 1866 - ஆஸ்திரிய-புருசிய போரில் ஆஸ்திரிய இராணுவம் இத்தாலிய இராணுவத்தைத் தோற்கடித்தனர்.
- 1898 - ஸ்பானிய-அமெரிக்கப் போர்: அமெரிக்கக் கடற்படையினர் கியூபாவில் தரையிறங்கினர்.
- 1911 - ஐந்தாம் ஜோர்ஜ் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் கட்டாயமாக நாசி ஜேர்மனியுடன் அமைதி உடன்பாட்டுக்கு ஒப்புக்கொண்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிப் படையினர் சோவியத் ஒன்றியத்தை முற்றுகையிட்டனர்.
- 1941 - சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான லித்துவேனியாவின் விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1976 - கனடாவில் மரணதண்டனை தருவது நிறுத்தப்பட்டது.
- 1978 - புளூட்டோவின் சாரண் என்ற துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1986 - மெக்சிக்கோவில் இடம்பெற்ற உலகக்கோப்பை காற்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜெண்டீனிய வீரர் மரடோனா நூற்றாண்டுக்கான கோலைப் போட்டார்.

### பிறப்புகள்

- 1962 - க்ளைட் ட்ரெக்ஸ்லர், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்
- 1964 - டான் ப்ரவுன் ஆங்கில எழுத்தாளர்


### இறப்புகள்

- 1990 - இலியா ப்ராங்க், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி.1908)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

**21.06.2014 - 07.01.2016**



# ஒளிமயமான வாழ்விற்கு வித்திடப் போகிறது ஒன்பதாம் இடத்து கேது!

## கடகம்



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**ஒளிமயமான வாழ்விற்கு வித்திடப் போகிறது ஒன்பதாமிடத்து கேது! எதைச் செய்தாலும், ஏன்? எதற்காக? என்று சிந்தித்துச் செயற்படும் கடக இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் வளர்ந்து தேயும் கிரகமாக விளங்கும் சந்திரன்தான் உங்கள் இராசிநாதன். எனவே, வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறி வந்துகொண்டேயிருக்கும். தளர்ச்சி வரும்பொழுது தக்கவிதத்தில் நீங்கள் பரிகாரங்களை மேற்கொண்டால் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முட்டுக்கட்டைகள் அகலும்.

வேகமாகச் செயற்படுவது மட்டுமல்லாது விவேகத்தோடு செயற்படும் ஆற்றல் பெற்றிருப்பதால்தான் ஏகோபித்த பாராட்டுக்கள் உங்கள் இல்லம் வந்துசேருகிறது. எவரையும் உங்கள்பால் ஈர்க்கும் சக்தி உங்களுக்கு உண்டு.

மனிதனாக பிறந்த நாம் எப்படியாவது சாதனை நிகழ்த்தவேண்டும். எத்துறையிலாவது சரித்திரம் படைக்க வேண்டுமென்ற எண்ணம் உங்கள் இதயத்தில் இடம்பிடித்திருக்கும். எனவே, மற்றவர் கருத்துக்களை பெயரளவில் கேட்டுக்கொண்டு கடைசி முடிபை நீங்கள்தான் எடுப்பீர்கள்.

கடிவாளமில்லாத குதிரையைப்போல சுற்றித்திரியும் மனதைப் பெற்ற நீங்கள், பொதுநலத்தில் ஈடுபடுகின்றபொழுது பொறுப்புக்கள் உங்களைத்தானே தேடி வருகின்றன. இப்படிப்பட்ட குணங்களைப்பெற்ற உங்களுக்கு, இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களைக்கொடுக்கும் என்பதைப்பற்றிப்பார்ப்போம்.

**முயற்சிகளில் வெற்றி தரும் மூன்றாமிடத்து ராகு! ஒளிமயமான வாழ்விற்கு ஒன்பதாமிடத்து கேது!**

இதுவரை துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மேட இராசியில் சஞ்சரித்துவந்த கேதுவும், 21.06.2014 அன்று பின்னோக்கிவந்து உங்கள் வாழ்வில் மிகப் பெரிய மாற்றங்களை விளைவிக்கப் போகிறார்கள்.

மூன்றாமிடமான கன்னி இராசியில் இராகுவும் ஒன்பதாம் இடமான மீன இராசியில் கேதுவும் சுமார் ஒன்றரை ஆண்டுகள் வாசம் செய்து உங்கள் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றி வைப்பார்கள்.

சுய ஜாதகத்தில் தோஷம் இருப்பவர்களுக்கு எண்ணற்ற தடைகள் இருக்கும். அவர்கள் தங்கள் சுய ஜாதகத்தில் நாக தோஷம் இருக்கிறதா, என்று பரிசீலனை செய்து குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தையும் ஆராய்ந்து சர்ப்ப சாந்திகளை சரிவரச்செய்து வந்தால் முன்னேற்றத்தின் முதற் படிக்குச் செல்லலாம்.

கோச்சார ரீதியில் ராகு-கேதுக்கள் எந்தெந்த சாரத்தில் சஞ்சரிக்கிறது. அந்தந்த சார பலத்தின் அடிப்படையில்தான் பலன்கள் கொடுக்கும். தற்சமயம் பெயர்ச்சியாகும். ராகு 3 நட்சத்திரக்கால்களிலும் கேது 3 நட்சத்திரக்கால்களிலும் உலா வர இருப்பதால், இருக்கும் இடத்திற்குரிய பலன்களோடு சார பலனும் சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

திட்டமிட்ட காரியங்களை திறமையாக முடிக்க வேண்டுமானால், கட்டத்தில் உள்ள ராகுபலம் பெற்றிருக்கவேண்டும். பாதசாரமும் நல்ல விதமாக அமைந்திருக்க வேண்டும்.

மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் இராகு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவார். முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெற வைப்பார். தொழில் வளர்ச்சியும், தொகை வரவும் எதிர்பார்த்தபடி இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். தலைமைப்பதவி கூட, ஒருசிலருக்கு வந்து சேரும். கவலை என்ற மூன்றெழுத்து ஓடும். வெற்றி என்ற மூன்றெழுத்துவீடு வந்து சேரும்.

உற்றார் உறவினர்களும் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர். ஓடிவந்து பணிபுரியும் பணியாளரில் ஒருசிலரை வைத்துக்கொண்டு மற்றவர்களை மாற்றியமைப்பீர்கள். பெரிய அளவில் தொழில்கள் தொடங்க வேண்டும் என்ற எண்ணங்கள் நிறைவேறப் போகிறது.

கோடிக்கணக்கில் மூலதனம் போட்டுத் தொழில் தொடங்க வேண்டுமானால் அரசு வழி ஒத்துழைப்பு வேண்டும் அல்லது அருகிலிருக்கும் பெரிய செல்வந்தர்களின் ஒத்துழைப்பு வேண்டும். அவை கிடைக்கும் விதத்தில் இந்த ராகு பெயர்ச்சி, உங்களுக்கு அமைந்திருக்கிறது. கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த தகராறுகள் அகலும். பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப் படுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் பகையை வளர்த்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. சேமிப்பு கரையாமல் இருக்க சிந்தித்துச் செயற்படுவது உத்தமம்.


**ஒளிமய வாழ்விற்கு 'உறுதுணை புரியும் ஒன்பதாமிடத்து கேது!**

ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது உன்னதமான வாழ்க்கைக்கு வழியமைத்துக்கொடுக்கும். பிதுர் ரார்ஜித ஸ்தானமாக ஒன்பதாம் இடத்தைக் கருதுவதால், பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். புதிய சொத்துக்களும் வாங்கிச் சேர்க்க இயலும். ஞானகாரகனாக வர்ணிக்கப்படும் கேது, ஒன்பதில் உலா வரும்பொழுது ஆன்மிகத்தின் மூலமாகவே அனைத்துக் காரியங்களிலும் வெற்றிகாண இயலும். எனவே, உங்கள் ஜாதகப்படி திசாபுத்தி [illegible] அறிந்து கொண்டு அதற்குரிய [illegible] தெய்வ வழிபாட்டையும் செய்து வந்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலையாகக் குடிக்கொள்ளும். தந்தை வழி உறவில் இருந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக அகலும்.

தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும். கும்பாபிஷேக விழா மற்றும் திருப்பணிகளுக்கு கொடுத்துதவும் வாய்ப்பும் முன்னின்று நடத்தும் வாய்ப்பும் உருவாகும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு**

மூன்றாமிடத்து ராகுவால் முன்னேற்றம் கிடைக்கவும் ஒன்பதாம் இடத்துக் கேதுவால் ஒப்பற்ற வாழ்க்கை அமையவும் திங்கட்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சண்முக நாதப்பெருமானையும் தட்சணாமூர்த்தியையும் முறைப்படி வழிபட்டு வாருங்கள். முன்னேற்றத்தை வர வழைத்துக்கொள்ள இயலும்.



**கேது, புதன்காலில் சஞ்சரிக்கும்பொழுது (21.06.2014 முதல் 25.02.2015 வரை)**

உடல்நலம் சீராகும். வீடு கட்டிக்குடியேற வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். தெள்ளத்தெளிவான சிந்தனையோடு தெய்வீக ஈடுபாட்டோடு நீங்கள் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் வெற்றிபெறும்.

**கேது, சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (26.02.2015 முதல் 04.11.2015 வரை)**

தொழிலில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. களைப்பை நீக்கி உழைப்பைக் கொடுத்தால் வெற்றி தானாக வந்துசேரும்.

**கேது, குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். பிள்ளைகளின் திருமணக் கனவை நனவாக்குவீர்கள். துடிப்போடு செயற்படுவீர்கள். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள்.

**பாதசாரப்படி ராகு-கேது தரும் பலன்கள்!**

**ராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 24.10.2014 வரை)**

பிள்ளைகள் வழியில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிபிற்கு வரும். பெயரும், புகழும் அந்தஸ்தும் கூடும். தொழில் வளம் பெருகும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும்.

**(25.10.2014 முதல் 01.07.2015 வரை)**

மறதி அதிகரிக்கும். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். தோட்டம், விவசாயம் என்று தொடர்கதையாய் உங்கள் பணியிருக்கும். அன்னிய தேச அனுகூலம் உண்டு. தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை.

**ராகு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, (02.07.2015 முதல் 07.01.2016 வரை)**

தன வரவு நன்றாக இருந்தாலும், மன நிம்மதி குறைவாகவே இருக்கும். குடும்ப சுமை கூடும். கொள்கைப்பிடிப்பைத் தளர்த்திக்கொள்ள நேரிடும். அரசியலில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்துசேரும். ஆற்றல் மிக்கவர்கள், உங்களுக்கு போற்றும்படியான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பர். கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது.

**சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள்!**

16.12.2014 இல் விருச்சிக இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக அர்த்தாஷ்டம சனி விலகிவிட்டது. இனி கடமை உணர்வோடு செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தனிமைப்படுத்தப்பட்ட நீங்கள், இனி குடும்பத்தோடு ஒன்று சேருவீர்கள். தடைகள் அகலும். பஞ்சம ஸ்தானம் பலம் பெறுவதால், பணத் தேவைகள் பூர்த்தியாகும். தொழில் தொல்லைகள் அகலும். தொகை கேட்ட இடத்திலிருந்து கிடைக்கும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு. விருச்சிக சனியால் விருத்தியம்சங்களை காணப்போகிறீர்கள்.

**குருப்பெயர்ச்சி!**

ராகு-கேது பெயர்ச்சிக்கு ஒரு வாரம் முன்பாக குரு பெயர்ச்சியாகிவிட்டது. கடகத்தில் உச்சம் பெறும் குரு உங்கள் இராசிக்கு ஒன்பதாம் இடமான பிதுர் ரார்ஜித ஸ்தானத்தைப் பார்ப்பதால் தந்தை வழி உறவில் நெருக்கம் ஏற்படும். அந்த இடத்தில் கேது சஞ்சரிப்பது யோகம்தான். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து தொழிலை வளப்படுத்துவர்.

05.07.2015 இல் சிம்ம இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். 9 இற்கு அதிபதி இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கும்போது, இன்பங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். இல்லத்தில் உள்ளவர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். விவகாரத்தில் இருக்கும் காரியங்களை விவேகத்துடன் செயற்பட்டு நல்ல நிலைக்கு கொண்டு வருவீர்கள். இலாகா மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்துசேரும்.

நாளை சிம்மம்...

**ஜோதிடக் கலைமணி -சிவல்புரி சிங்காரம்-**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொதுபல சேனாவை தடைசெய்ய முடியாது

## ஜனாதிபதி திட்டவட்டம்



பொதுபல சேனாவைத் தடை செய்ய முடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அளுத்கம வன்முறைகளுக்குக் காரணமான பொதுபல சேனாவைத் தடை செய்யவேண்டும் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனால், அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியுடன் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் மாலை அலரி மாளிகையில் நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும், பொதுபல சேனாவைத் தடைசெய்ய வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

அதற்கு ஜனாதிபதி பொதுபல சேனாவைத் தடைசெய்ய முடியாது என்றும், அவ்வாறு செய்தால் அவர்கள் கதாநாயகர்களாகி விடுவர் என்றும் அடிப்படைவாத அமைப்புகளைத் தடைசெய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், அதன்மூலம் மதங்களுக்கிடையிலான பிரச்சினை முடிந்து விடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச அளுத்கம வன்முறைகளுக்கு சிங்கள, முஸ்லிம் அடிப்படைவாதிகளே பொறுப்பு என்று குறிப்பிட்டு பொதுபல சேனாவுக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டார்.

அப்போது, குறுக்கிட்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பொதுபல சேனாவைப் பாதுகாக்க ஜாதிக ஹெல உறுமய முற்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார். (அ)

# ஆஸி. அகதி விசா கோரல் வழக்கு; உயர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

அவுஸ்திரேலியாவில் அகதிகளின் விசா தொடர்பாக வழக்கறிஞர் டேவிட் மேன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு வெற்றி பெற்றுள்ளது.

படகுகளிலோ அல்லது வேறு எந்த சட்டவிரோதமான முறையிலோ அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்தவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட பின்னர் 90 நாட்களுக்குள் பாதுகாப்பு விசா வழங்கப்படவேண்டுமென்ற கால எல்லை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்தது.

இந்த கால எல்லையை நீடிக்கும்படி அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் அரசாங்கத்துக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

குடிவரவு அமைச்சர் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை மறுபரிசீலனை செய்யும்படியும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் தற்போது அரசாங்கத்தால் ஒரு வருடத்தில் கொடுக்கப்படும் பாதுகாப்பு விசாக்களின் மொத்த எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் சட்டத்தையும் உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.


உயர் நீதிமன்றமானது அமைச்சருக்கு இந்த 90 நாட்கள் கால அவகாசத்தின் நிமிர்த்தம் வழங்கக் கூடிய பாதுகாப்பு விசாக்களின் மொத்த எண்ணிக்கையை மட்டுப் படுத்தும் அதிகாரமும் கிடையாது என்பதையும் இந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த மாதங்களில் செனட் சபையிலும் தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டும் இது தொடர்பாக பல கருத்துக்களும் விமர்சனங்களும் எழுந்திருந்தன.

ஆனால் உயர் நீதிமன்ற வழக்குகளுக்கு செல்லாமல் குடிவரவு அமைச்சர் மொரிசன் நாட்களை தள்ளிப்போட்டமையே இதற்கான காரணமாக இருந்தது. (அ)

# யுத்தத்தில் வென்றவர்கள் அளுத்கம மக்களை காப்பாற்ற தவறிவிட்டனர்

## ஜனாதிபதி பதவி விலக வேண்டும்-தெவரப்பெரும



(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததாக கூறும் ஜனாதிபதியால் அளுத்கம பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களை காப்பாற்ற முடியாமல் போனதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களின்போது, சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரான இவர மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

அளுத்கம, தர்கா நகர் மற்றும் பேருவளை உள்ளிட்ட நகரங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடித்த வன்முறைகளைத் தொடர்ந்து பொலிஸ் ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியிலும், அருகிலுள்ள வெலிப்பென்ன நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் பல எரிக்கப்பட்டன, வீடுகளும் தாக்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம் குடும்பமொன்று மரண வீடொன்றுக்குச் செல்வதற்காக அளுத்கமயிலிருந்து வெலிப்பென்ன செல்ல வேண்டியிருந்தது.

அந்தக் குடும்பத்தை பாதுகாப்பாக அழைத்துச் சென்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும மீதும் வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

தன்மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பாலித்த தெவரப்பெரும நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினை எழுப்பியிருந்தார்.

வன்முறைகளில் ஈடுபட்டவர்களை பௌத்தர்கள் என்றோ சிங்களவர்கள் என்றோ சொல்ல முடியாது. ஞானசார என்கின்றவர் நடத்துகின்ற தனியான மதப்பிரிவின் வன்முறையாளர்கள் தான் இந்த தாக்குதல்களை நடத்தினார்கள்.

சரியென்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியும் பதவிவிலக வேண்டும்.

முப்பது ஆண்டுகால யுத்தத்தை முடித்துவைத்த ஜனாதிபதியால் ஓரிரு கிலோமீற்றர் பரப்புக்குள் வாழும் மக்களைக் காப்பாற்ற முடியாமல் போனதற்காக ஜனாதிபதி பதவிவிலக வேண்டும்.

சுமார் 500 பொலிஸார் வீதியில் நின்று கொண்டிருக்க என்மீது வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

அரசியல்வாதிகள் தேர்தல் காலம் வரும்வரை வாய்மூடி மௌனிகளாக இருக்காமல் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உடனடியாக முன்வர வேண்டும் என்றார். (அ)

# ஒரு இலட்சம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும்

(கொழும்பு)

சந்தையில். செயற்கையான அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்த சில வியாபாரிகள் முயற்சி செய்வதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து, துரிதமாக ஒரு இலட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சந்தையில் அரிசி விலை உயர்வதை கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறு அரிசி இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டதாக அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பில் ச.தொ.ச. தலைவருக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாந்து அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ)

# இலங்கையர்கள் என்ற வகையில் நாம் ஒற்றுமையுடன் வாழ்வோம்

## பிரதமர் ஜயரட்ன அழைப்பு

(கொழும்பு)

சிறிய பிரச்சினைகளுக்காக சமூக மோதலை தூண்டுவதால் பாரிய நட்டம், ஆன்மீக சிந்தனையில் வளர்ந்தோர் வன்முறைகளை வெறுக்க வேண்டும், சமூகம் பற்றிய புரிந்துணர்வு இல்லாமல் வாழ்வதனால் சிலர் இன, மத ரீதியாக மோதல்களில் ஈடுபடுகின்றனர்.

இதனால் சமூகத்தில் பாரிய அழிகள் ஏற்படுவதுடன் நாட்டுக்கு களங்கம் ஏற்படுவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையர் என்ற வகையில் நாம் அனைவரும் நட்புறவுடன் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கியவாறு வாழ வேண்டும். அதற்கு உகந்த சூழலை ஜனாதிபதி உருவாக்கித் தந்துள்ளார்.

அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கும் பிரகாரம் பௌத்த சாசனம் மற்றும் பௌத்த தர்மத்தினை போதித்துப் பாதுகாப்பதற்கு எமது உயிரைப் பணயம் வைத்தேனும் நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

அதுபோலவே ஏனைய மதங்களுக்கும் கௌரவமளித்து அவற்றையும் சமமாக மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்கும் எமது அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றார். (அ)

# பதினேழு பல்கலைக்கழகங்களில் மொழி ஆய்வுகூடங்கள் நிறுவப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், 17 பல்கலைக் கழகங்களிலும் மொழி ஆய்வு கூடங்களை நிறுவ இருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாய்மொழி விடைக்காக சஜித் பிரேமதாச எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்த மொழி ஆய்வு விடயங்களுக்கு 21 ஆம் நூற்றாண்டின் உயர் கல்விக்கான செயற்றிட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகங்களில் பெரும்பாலான பாடநெறிகள் ஆங்கில மொழியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது மட்டுமன்றி அவர்களின்



ஆங்கில மொழியறிவை மேம்படுத்த மேலும் பல திட்டங்களை முன்னெடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.


தொழில் துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப ஆங்கில மொழியறிவின் அவசியத்தை பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் உணர்த்துவதற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி- திக்கரை அருள்மிகு முருகமூர்த்தி கோவில் மஹோற்சவம் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். திருவிழாக்காலங்களில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் வசந்தமண்டபப் பூஜை நடைபெறும். (அ)




கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் உயர்தர மாணவ தலைவர்ளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடப்பெற்றது. இதில் பிரதம விருந் தின்ராக கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவனும் மலேசியா வாழ் பொறியியலாளருமான த.உபேந்திரன் மாணவர் ஒருவருக்கு சின்னம் சூட்டுவதை படத்தில் காணலாம்.

(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



77

...யோசித்தேன்.

கஸ்தூரி அம்மாளைக் காயப்படுத்திவிடக் கூடாது என்பதில் கவனமாய் இருக்க வேண்டுமென்றேன்.

காயத்தைக் கண்ணீர் சிந்தவிட்டு விடக்கூடாது என்றேன்.

சமையல் அறையில் உப்புப் போடுவதில் தப்பு நேர்ந்தால்கூட அதைச் சுட்டிக் காட்டும் உரிமையை மட்டும் எடுத்துக் கொள்ளலாமே தவிர, தட்டிக் கேட்கும் உரிமையை எடுத்துக் கொள்ளக் கூடாது என்றேன்.

ஒருமுறை அவரைக்காய்ப் பொரியலில் வெண்முடி ஒன்று விழுந்து கிடந்தது.

பார்த்தேன்.

அதை மௌனமாய்த் தள்ளி வைத்துவிட்டேன்.

பிறிதொரு சந்தர்ப்பத்திலும் என் கண்ணுக்கு இன்னொரு முடி தட்டுப் பட்டது.

அந்த அம்மாளை அழைத்தேன்.

"உங்களுக்கு அடிக்கடி முடி கொட்டுகிறது போலிருக்கிறது; கவனித்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

அதன்பிறகு முடியும் கொட்டவில்லை; சாப்பாட்டையும் கொட்டவில்லை.

சமையல் என்பது எத்தனை பெரிய நரகம்.

மனமும் விரலும் ஒருமைப்பட்டு-

எவரெவருக்கு எது பிடிக்கும் என்று மனதில் எழுதிக் கொண்டு-

கல்லிலிருந்து அரிசியைக் காப்பாற்றி, அரிவாள் மணையிலிருந்து விரலைக் காப்பாற்றி-

காய்கறிகளுக்குச் சிக்கெடுத்து-

ஒரு கண்ணை உலையிலும் ஒரு கண்ணை அறையிலும் வைத்து நெருப்புத்தணலில் நித்தம் புரியும் கட்டாயத் தவமல்லவா அந்தக் கலை?

இந்தியப் பெண்கள் சமையலறையிலேயே பாதி சமாதியாகி விடுகிறார்கள்.

இப்படித் தவணை முறையில் சாக வேண்டாமென்றுதான் பலபேர் மொத்தமாய்த் தீக்குளித்துச் செத்துப் போகிறார்கள்.

கஸ்தூரி அம்மாளின் கஷ்டத்தைப் பொன்மணியும் நானும் உணர்கிற அளவுக்கு அந்த அம்மாள் உணர்வதில்லை.




கஸ்தூரி அம்மாளின் வேலைகளைக் குறைத்து என் மனைவி, நேரத்தை மிச்சம் செய்து கொண்டுப்பாள்; பக்கத்திலிருந்து வேலைகளைப் பகிர்ந்து கொள்வாள்; ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் சமையலறையைச் சாத்திவிட்டுப் படம்பார்க்க வைப்பாள்.

விடுமுறையைத் தாங்களே எடுத்துக் கொள்ளாவிட்டால் இந்தியப் பெண்களுக்குச் சமையலறையிலிருந்து விடுதலை ஏது?

இந்தியச் சமையல் முறையே தப்பு.

இந்தியனின் உயரத்தைவிட இந்தியனின் நாக்கு நீளமாக இருக்கிறது.

ஒரே கடவுளுக்கு சகஸ்ரநாமம் வைத்த மாதிரி, ஆறு சுவைகளிலிருந்து அறுநூறு சுவைகளை உண்டாக்கிக் காட்ட நம்மால் மட்டுமே முடிகிறது.

உணவில் சத்துக்களையும் சாரங்களையும் விட, வடிவங்களையும் வாசனைகளையுமே அதிகம் நேசிக்கிறோம்.

அது பெண்களின் தலையில் வந்து விடிந்தது.

சமுதாயத் தலைமை யேற்குமிடத்தில் நானிருந்தால், இனிமேல் சமையலறை இல்லாத வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அத்தனை பெண்களுக்காகவும் ஆறுதல் சட்டம் போடுவேன்.

அடுத்த தலைமுறையில் கஸ்தூரி அம்மாள் மாதிரி தன்னைத் தேய்த்துக் கொண்டு இன்னொரு குடும்பத்துக்கு மணக்கிற சந்தனங்கள் கிடைப்பார்களா?

கிடைக்கவே மாட்டார்கள்; கிடைக்கவும் கூடாது.

தன்னோடு வந்து இருந்துவிடுமாறு கஸ்தூரி அம்மாளை அவர் மகள் அழைத்தார்.

வயதின் முதிர்ச்சி; மனதின் தளர்ச்சி.

கஸ்தூரி அம்மாளும் பாதி மனதோடு பயணப்படச் சம்மதித்தார்.

நாங்களும் பாதி மனதோடு விடைதரச் சம்மதித்தோம்.

பட்டுப்புடவை- கண்ணீர்- பணம்- பாசம் எல்லாவற்றையும் கொடுத்தனுப்பினோம்.

என் பையன்கள் கார்க்கதவைச் சாத்திவிட்டுக் கஸ்தூரி அம்மாளுக்குக் கைகாட்டினார்கள்.

வீட்டுக்குள் ஏதோ ஒரு வெறுமை குடிகொண்டது.

ஒரு பத்து நாள் ஆகியிருக்கும்.,

அதிகாலையில் அழைப்பு மணி.

கதவு திறந்தால்- கஸ்தூரி அம்மாள்.

எங்களைப் பிரிந்து அவராலும் இருக்க முடியவில்லை; அவரைப் பிரிந்து எங்களாலும் இருக்க முடியவில்லை.

வீட்டுக்கு வரும் உறவினர்கள் கஸ்தூரி அம்மாளிடம் சொல்லாமல் போவதில்லை.

எங்களுக்கு வரும் உறவினர் கடிதங்கள் கடைசி வரியிலாவது கஸ்தூரி அம்மாளின் நலம் கேட்கும். கஸ்தூரி அம்மாள் எங்கள் உறவினர் ஆகிவிட்டார்.

பொன்மணியிடம் சொல்லியிருக்கிறேன்:

"வேலை செய்ய இயலும் வரை கஸ்தூரி அம்மாள் வேலை செய்யட்டும்; இயலாத காலத்தில் இங்கேயே இருக்கட்டும். நமக்குச் சேவை செய்யும் பெண்மணிக்குப் பின்னாளில் நாம் சேவை செய்வோம். நம் குடும்பம் என்பது நான்கு பேர் இல்லை. ஐந்து பேர். நாம் இருவர்; நமக்கு மூவர்."

(தொடரும்)

-வைரமுத்து-

# பொதுபல சேனாவை தடை செய்யுங்கள்

## அமைச்சர் றிசாத் வலியுறுத்து

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு அரசாங்கம் உடனடி நிவாரணம் வழங்க வேண்டும், அதுமட்டுமன்றி பொது பல சேனா அமைப்பை உடனடியாக தடை செய்ய வேண்டும், என அமைச்சர் றிசாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

சவூதிக்கு சென்றிருந்த அமைச்சர் றிசாத் பதியுதீன் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை ரத்து செய்து விட்டு நாடு திரும்பியவுடன் பேருவளைக்கு விஜயம் செய்தார்.

அச்சுறுத்தல் காரணமாக இடம்பெயர்ந்து பேருவளை அல் ஹுமைசரா மத்திய கல்லூரியில் தஞ்சமடைந்துள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் அங்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தில் இருப்பதையிட்டு வேதனையும் வெட்கமும் அடைகிறேன். அளுத்கம மற்றும் பேருவளை பிரச்சினைக்கு இந்நாட்டில் தீர்வு கிடைக்காவிடின் சர்வதேசத்தை நாடவும் பின்னிக்கப் போவதில்லை.

ஞானசார தேரர் ஒரு மிகப் பெரும் பயங்கரவாதி. பொது பல சேனாவை தடைசெய்வதற்கும், ஞானசார தேரரை கைது செய்து சிறையில் அடைப்பதற்கும் நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுபட்டு கோஷமெழுப்ப முன்வர வேண்டும்.

முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிப்பதே பொது பலசேனாவின் ஒரே இலக்கு. நான் சவூதியில் இருந்தபோது அங்கு வாழும் நூற்றுக்கணக்கான பேர் ஒன்று பட்டு இந்த பொது பலசேனாவை தடை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தி கேட்டனர்.

முஸ்லிம்கள் மீதான தாக்குதலினால் ஏற்பட்டுள்ள உயிர் இழப்புக்கள், சொத்தழிப்புக்கள் தொடரபில் முஸ்லிம்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்றார். (அ)

# குருப்பெயர்ச்சி பலனின்படி நாட்டை விட்டு வெளியேறுங்கள்

## ஜனாதிபதிக்கு சோதிடர்கள் ஆலோசனை

குரு பெயர்ச்சி இடம்பெற்று வரும் இந்த சந்தர்ப்பத்தில் உடனடியாக நாட்டில் இருந்த வெளியேறி வெளிநாட்டில் தங்கியிருக்குமாறு ஜனாதிபதிக்கு சோதிடர்கள் எச்சரிப்புடன்கூடிய ஆலோசனையை வழங்கியுள்ள்தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், சோதிடர்களின் ஆலோசனையை பொருட்படுத்தாது ஜனாதிபதி நாடு திரும்பியதால் சோதிடர்கள் குழப்பமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

குரு பெயர்ச்சியினால் ஏற்படும் பாதகங்களை தவிர்ப்பதற்காக 100 பிக்குமாருக்கு தானம் வழங்கிவிட்டு, மாலைதீவு நாட்டுக்காவது சென்று சில நாட்கள் தங்கியிருக்குமாறு சோதிடர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமைகளில் ஜனாதிபதி எப்படியான தீர்மானங்களை எடுப்பார் என்பதை கணித்து கூற முடியாதிருப்பதாக அலரி மாளிகையின் தகவல்கள் தெரிவித்தன. (அ)

# சட்ட ஒழுங்கில் பிரச்சினை; நீதி அமைச்சர் ஒப்புதல்

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமே குறிப்பிடுவதாக ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்ட ஒழுங்கில் பிரச்சினை இருப்பதாக நீதி அமைச்சர் ஒப்புக் கொள்கின்றார்.

பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. கடைக்குச் சென்று சீனி ஒரு கிலோ வாங்கினால் பணவீக்கம் பற்றி புரிந்து கொள்ள முடியும்.

போர் இடம்பெற்ற காலத்தை விடவும் தற்போது சீனியின் விலை உயர்வடைந்துள்ளது.

அரசாங்கம் பாரியளவில் கடன் பெற்றுக்கொண்டுள்ளது. இதனால் மககளினால் கடன் பெற்றுக் கொள்ள முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி ஆலோசகர்களுக்கு 41 மில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்காக 41 மில்லியன் ரூபா நிதி செலவீடப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்காக அரசாங்கம் இந்தப் பணத்தை செலவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் 38 ஆலோசகர்களுக்காக அரசாங்கம் 41 மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணியாளர்களுக்காகவும் அரசாங்கம் பாரியளவில் பணத்தை செலவிட்டு வருவதாக அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ஆலோசகர்களுக்காக பெருந் தொகைப் பணத்தை செலவிடுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம வன்முறைக்கு யார் பொறுப்பு?

இலங்கைத் தீவின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் அளுத்கம வன்முறைகள் அரங்கேறியுள்ளன. அளுத்கமயில் தொடங்கி தர்கா நகர், பேருவளை, தெஹிவளை, பதுளை என்று பல்வேறு இடங்களுக்கும் பரவிய இந்த வன்முறைகள் உலகின் கவனத்தை இலங்கையின் பக்கம் திரும்ப வைத்துவிட்டது.

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் ஒரு விசாரணைக்குழுவை நியமித்துள்ளது. குறித்த தகவல் கூட இந்தளவுக்கு உலகளாவிய கவனத்தை ஈர்த்திருக்கவில்லை.

கடந்த வாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வில் தொடக்க உரை நிகழ்த்திய ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இந்த விசாரணைக்குழு பற்றிய அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

அதற்குப் பின்னர் இவ்வன்முறைகள் நிகழ்ந்திருப்பது இலங்கைக்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. இவ்வன்முறைகளின் அடிப்படையாகக் கூறப்படும் சம்பவங்கள் எல்லாமே திட்டமிடப்பட்டவையென்று கூற முடியாது.

அதேவேளை, ஏதேச்சையாக நடந்த சில சம்பவங்களைக் கொண்டு இதனையொரு பெரும் வன்முறையாக மாற்றப்பட்டதை எதிர்பாராத நிகழ்வெனவும் கருத முடியாது.

கடும்போக்குவாத பொதுபல சேனா நடத்திய கூட்டத்தின்போது, ஞானசார தேரர் நிகழ்த்திய உரையும் அதற்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளும் நாட்டில் மத ரீதியான பதற்றநிலையொன்று உள்ளதென்பதை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

சர்வதேச அரங்கில் இலங்கை அண்மைக் காலமாக இத்தகைய குற்றச்சாட்டுகளுக்குள்ளாகி அவப்பெயரைச் சந்தித்து வருகின்றது. எனினும், இலங்கை அரசாங்கம் ஒருபோதும் அதனை ஏற்றுக் கொண்டதில்லை. நாட்டில் இன, மத நல்லிணக்கச் சூழல் நிலவுவதாக அரசாங்கம் எப்போதுமே வாதிட்டு வந்துள்ளது.


எல்லா இன, மத மக்களும் பாதுகாப்புடனும் நிம்மதியாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ்வதாக அரசாங்கம் வெளியுலகிற்கு காண்பிக்க முற்பட்ட விம்பத்தை ஒரே நொடியில் நொறுக்கிப் போட்டுவிட்டது அளுத்கம வன்முறைகள்.

அளுத்கம வன்முறைகளுக்கு காரணம் தாமல்ல, மறுதரப்பே என்று இருதரப்பும் வாதிடுகின்றன. யார் இந்த வன்முறைகளுக்கு காரணமென்று ஆராய்வது இப்பத்தியின் நோக்கமல்ல.

இதுபோன்ற வன்முறைகளின் அடிப்படை, இதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படாமை, இதன் விளைவுகள் என்பனவே இப்பத்தியின் ஆய்வுப்பரப்பாகும்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், தீவிரம் பெற்றுவரும் பௌத்த கடும்போக்குவாதம் நாட்டை ஆபத்தான திசையில் கொண்டு செல்லத் தொடங்கியுள்ளது.









விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பெறப்பட்ட வெற்றியின் மிதப்பே ஏனைய மதங்கள், இனங்களை அடக்கியாளும் பௌத்த கடும்போக்குவாதம் தீவிரம் பெறக் காரணம்.

தமிழருக்கு எதிராக கடைப்பிடிக்கப்பட்ட இந்த கடும்போக்குவாதம், போர் முடிபுக்கு வந்த பின்னர் மெதுவாக ஏனைய மதங்களை நோக்கித் திரும்பத் தொடங்கியது.

குறிப்பாக கத்தோலிக்க, பெந்தேகொஸ்தே மற்றும் இஸ்லாமிய மதங்கள் மீதான வெறுப்பை தூண்டத் தொடங்கியது இந்த பௌத்த அடிப்படைவாதம்.

திடீரென இத்தகைய போராட்டங்களினூடாக பொதுபல சேனா, இராவண பலய உள்ளிட்ட அமைப்புகள் பலம் பெற்றதுடன், இந்த கடும்போக்குவாதம் மத தீவிரவாதமாக மாறியது.

தம்மை மத அடிப்படைவாதிகள் என்றும் இனவாதிகள் என்றும் அழைப்பதாகவும் அது சரியே என்றும் கொழும்பில் செய்தியாளர்களிடம் கடந்த திங்களன்று பெருமையாக குறிப்பிட்டிருந்தார் பொதுபல சேனாவின் பொதுச்செயலரான ஞானசார தேரர்.

சிங்கள பௌத்த மக்களின் காவலர்களாக தம்மை காட்டிக்கொள்வதில், அவர்களுக்காக போராடும் தீவிரவாதிகளாக காட்டிக்கொள்வதில் பொதுபல சேனா போன்ற அமைப்புகள் பெருமைப்படுகின்றன. இங்கிருந்துதான் மதரீதியான பதற்றநிலை உருவாகத் தொடங்கியது.

கிறிஸ்தவர்களின் மதப்பரப்புரைக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்தியிருந்த பொதுபல சேனா, அது மேற்குலகில் கடும் எதிர்ப்பை உருவாக்குவதை உணர்ந்து கொண்டு மெதுவாக இஸ்லாமியர்கள் பக்கம் திரும்பியது.

ஹலாலுக்கு எதிரான போராட்டங்கள் அங்காங்கே பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களென்று நடந்து வந்த வன்முறைகளின் தொடர்ச்சியாகவே அளுத்கம, பேருவளை வன்முறைகளை குறிப்பிடலாம்.

இவை அளுத்கமவில் பௌத்த பிக்கு ஒருவரின் வாகனம் தாக்கப்பட்ட சம்பவத்தின் விளைவாக இடம்பெற்ற வன்முறைகளல்ல.

இதற்கான அடிக்கல் ஏற்கனவே பொதுபல சேனாவின் கோட்பாடுகளிலேயே நாட்டப்பட்டுவிட்டது. அதனால்தான் சிறு சம்பவங்கள் கூட ஊதிப் பெரிதாக்கப்பட்டு வன்முறைகளாக வெடித்தன.

அளுத்கம வன்முறைகளின் பின்னர் அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில், அளுத்கம வன்முறைகள் குறித்து ஊடகங்கள் பொறுப்பற்று செய்திகளை வெளியிடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அதில் அளுத்கம வன்முறைகளை சிறு சம்பவங்களென்றும் அதை ஊடகங்களே பெரிதாக காட்டியுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

நான்கு பேர் கொல்லப்பட்டு ஏராளமானோர் காயமடைந்து பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் அழிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள், வீடுவாசல்களை விட்டு வெளியேறிய பெரும் அனர்த்தத்தை சிறு சம்பவங்களென்று கூறி அடக்க முயன்றது அரசாங்கம்.

இதுபோன்ற ஊக்கங்கள்தான் பொதுபல சேனா போன்ற கடும்போக்குவாத அமைப்புகள் இந்தளவுக்கு பலம் பெறக் காரணமாகியுள்ளன.

இத்தகைய அமைப்புகள் அரசாங்கத்தின் நிழலிலிருந்தோ, அதன் சிறகிலிருந்தோ இலகுவாக வலுப்பெற முடிகிறது.

அளுத்கமவில் பௌத்த பிக்குவின் வாகனம் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு உரிய பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் செய்யப்பட்டு, இன அல்லது மத ரீதியான பதற்றம் தீவிரம் பெறாமல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தால், இவ்வன்முறைகள் ஏற்பட்டிருக்காது.

ஆனால் அரசாங்கமோ, சட்டம் ஒழுங்கை பேண வேண்டிய பாதுகாப்புத் தரப்பினரோ அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கவில்லை என்பதையே இந்த வன்முறைகளின் கோரம் எடுத்துக் காட்டியுள்ளது.

இந்த வன்முறைகளின் காயத்திலிருந்து இரத்தம் வடிவது நின்றுபோக முன்னரே, முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவனெல்லையில் மற்றொரு கூட்டத்தை ஒழுங்குசெய்து மீண்டுமொரு வன்முறைக்கு தூபம் போடத் தயாராகியிருந்தது பொதுபல சேனா.

நீதிமன்றத் தடை உத்தரவால் இன்னொரு அனர்த்தம் தடுக்கப்பட்டது.

(தொடரும்...)

கே.சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த அமெ. சதித் திட்டம் தீட்டுகின்றது

## கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி தெரிவிப்பு



இலங்கையில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா பின்னணியில் நின்று திட்டம் தீட்டுகிறது என கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஏறாவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "இலங்கையில் அசாதாரண சூழ் நிலையை உருவாக்குவதில் அமெரிக்கா பின்னணியில் இருந்து வருகின்றது. இதற்காக அமெரிக்கா பண உதவியையும் வழங்கி வருகின்றது. இது விடயத்தில் மக்கள் பொறுப்புணர்ச்சியுடனும் அவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுவதற்கு சமூக வலைத்தளங்களும் ஒரு காரணமாகும். செய்திகளை திரிபுபடுத்தி பொய்யான தகவல்களை குறுஞ்செய்தி மூலமும், முக நூல் மூலமும், ஏனைய இணையத்தளங்கள் மூலமும் பரப்பியிருந்தனர். சில் திரிபுபடுத்தப்பட்ட குறுஞ் செய்திகள் மூலம் நாட்டில் குழப்பத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்த முனைகின்றனர்.

அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பலர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிலர் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். தீவிரமான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி, முஸ்லிம் மக்களுடன் நெருக்கமான தொடர்பை வைத்துள்ளவர். இந்த பிரச்சினை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர் சகல தரப்பினருக்கும் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

"தீய சக்திகளுக்கும் அடிப்படைவாத சிந்தனை உள்ளவர்களுக்கும் பலியாகிவிடாமல் நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு அனைவரும் உழைக்க வேண்டும். இன்று சில அரபு நாடுகளில் நடைபெறும் பிரச்சினைகள், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், அழிவுகளை நாம் பார்க்கின்றோம். அதைப்போன்று இந்த நாட்டை கொண்டு செல்வதற்கு அனுமதிக்கக் கூடாது" என்று அவர் வலியுறுத்தினார்.

வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இங்கும் பொருட்கள் சேகரிப்பு மற்றும் பண வசூலிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் மோசடிகள் இடம் பெற்று விடக் கூடாது. வன்முறைச் சம்பவங்களினால் சேதமடைந்துள்ள வீடுகளை இராணுவத்தினரினால் புனரமைத்துக் கொடுக்கப்பட்டன. யாராக இருந்தாலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் படையினர் செயற்படுவார்கள். வன்முறைச் சம்பவங்களுக்கு காரணமாக யார் இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படுவார்கள்.

பொதுபல சேனா ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடமாக முஸ்லிம்கள் மீது குறி வைத்து செயற்படுகின்றனர். பள்ளிவாசல்களை தாக்குகின்றனர். முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை தாக்குகின்றனர். இந்த நிலையில் பொது பல சேனாவை ஏன் தடை செய்யவில்லை என அங்கு ஒருவர் கேட்டதற்கு பதிலளித்த அவர் "இது ஒரு ஜனநாயக நாடு. எடுத்த எடுப்பில் எவரையும் தடை செய்ய முடியாது" என்றார்.

"நிலைமைகளை அவதானித்து வருகின்றோம். சட்டத்தின் மூலம் இவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து இந்துமாமன்றம் அறிக்கை

(கொழும்பு)

இனவாதத்தையும் சிறுபான்மை மக்களுக்கெதிராகத் தூண்டப்படும் இனமதத் துவேச வன்முறைகளையும் முக்கியமாக சமீபத்தில் அளுத்கம , பேருவளை போன்ற இடங்களில் இஸ்லாமிய மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மத வன்முறைகளையும் இந்நாட்டின் இந்துமன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்துமாமன்றம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அம்மன்றம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

தனது நாட்டின் அரசாங்கத்திடம் இருந்து எந்த ஆபத்தோ பயமோ இல்லை என்று ஒவ்வொரு பிரஜையும் உணர வேண்டும். நியாயமானதும் சரியானதுமான முறையில் தாங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே சர்வதேச ரீதியில் சகலப் பிரஜைகளும் ஒவ்வோர் அரசாங்கத்திடமும் இருந்து (கிடைக்காவிட்டாலும்) ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

இன, மத, மொழி வேறுபாடு காட்டும் தீய எண்ணத்துடன் எவரையும் பாரபட்சமாக நடத்துவதற்கு எவரும் அரச அதிகாரத்தைப் பாவிக்க அனுமதிக்கப்படக் கூடாது.

சகல மக்களும் சட்டத்தின் முன் சமமானவர்களே எனவும் சகலருக்கும் சட்டத்தின் கீழ் சம பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டுமென்பதும் அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

ஜனாதிபதி, சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதையும் நாட்டில் இன்னுமோர் இன வன்முறை ஏற்பட இடமளிக்கப்படமாட்டாதெனவும் ஆணித்தரமாகக் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்வோம்.

இவ்விடயத்தில் இன வன்முறை தொடர்பாக உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையின் (செசனல் பத்திரிகை இல.-III-2003 இன் பந்திகள் 255 மற்றும் 256 களில்) பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

✲ இனம், மதம் சார்பான எந்தவொரு துவேச முன்னெடுப்புக்களுக்கு தடை செய்யப்பட வேண்டும்.

✲ இல்ங்கையானது சகல மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் மத சார்பற்ற நாடாக இருத்தல் வேண்டும்.

✲ இனம், மதம் வேறுபாடு கருதாது சகலருக்கும் சம வாய்ப்புக்கள் வழங்குவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

✲ இனம், மதம் தொடர்பாக ஏற்படும் மனிதவுரிமை மீறல்கள் களையப்படக் கூடிய தான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குதல் வேண்டும்.

இவை இந்து மாமன்றத்தின் பரிந்துரைகள்.

எனவே, நாட்டின் நலன் கருதி அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் எமது விதந்துரைப்புக்களை கூடிய கவனத்துடன் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசில் இருக்க வெட்கமாக இருந்தால் ஹக்கீம் வெளியேறட்டும்-சம்பிக்க

(கொழும்பு)

நாட்டில் நடைபெறும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியில் அமர இடமளிக்க போவதில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்று நாட்டின் ஜனாதிபதியாகலாம் என ரணில் விக்ரமசிங்க எண்ணிக் கொண்டிருக்கிறார்.

பல்தேசிய சக்திகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் பயணம் ஒன்றை மேற்கொள்ள முயற்சிப்பாரேயானால் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவும் இதே நிலைப்பாட்டில் இருந்து வருகிறார்.

ஹர்த்தால்களுக்கு நாங்கள் அஞ்சப போவதில்லை. ஹர்த்தால்கள் நடத்தப்படுவதன் மூலம் நாங்கள் மேலும மேலும் பலமடைவோம்.

அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்களின் பின்னணியில் ஜிகாத் என்ற முஸ்லிம் அமைப்பு இருக்கின்றது.

அதேவேளை அரசாங்கத்திற்குள் இருப்பதற்கு வெட்கமாக இருந்தால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

# வாரம் ஒரு தகவல்

## விஷப் பரீட்சை

"சேர்....உங்களுக்கு என்ன ஆச்சு?"

"என்ன சொல்றீங்க?"

"கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க.... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பீட்டீங்க... சரி; சாப்பிட்டு வெற்றிலை பாக்கு போட்டீங்க... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விடயம்?"

"ஹி அதுவா? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம்! கொட்டினால் வலி தாங்க முடியாது. அங்கே பந்தல் முகப்பில் நின்று கொண்டிருந்தபோது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராகப் பறந்ததைப் பார்த்துவிட்டேன். அதுதான் பறந்து வந்துவிட்டேன்."

தேனீ கொட்டினால் வாதநோய்க்கு நல்லது சேர்"

"அப்படித்தான் சொல்வது வழக்கம். அது உண்மையா?"

"லண்டன் விஞ்ஞானிகள் தேனீ விஷத்திலிருந்து Peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே"

"அப்படியா?"

"ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந்துகளைக் கொடுப்பது வழக்கம். அதை யெல்லாம் விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப்பிட்டு கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச்சல் கிடையாது சேர்"

"இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர். அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள்.

"சரி... நான் தான் அப்படி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்படி ஓடிவரவேண்டும்?"

நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

அ.நளினாசினி, கோண்டாவில்

**Hello வியா Brother**

**தமிழனின் ஒற்றுமை பற்றி தங்கள் கருத்து....**

ஒரு சிறிய கதை.

யமதர்மராஜா மனிதன் செய்த பாவங்களுக்கு தண்டனை வழங்க ஒவ்வொரு இனத்தவர்களைய்யும் ஒவ்வொரு கிடங்கில் இட்டு மூடி பூட்டுப் போட்டிருந்தார். ஆனால் தமிழர்கள் அடைக்கப்பட்ட கிடங்கு மூடப்படவில்லை. அதைக் கண்ட சித்திரகுப்தன் தர்மராஜா எல்லா கிடங்குகளும் மூடி இருக்கின்றன. ஆனால் தமிழர்களை அடைத்த கிடங்கு மட்டும் ஏன் மூடப்படவில்லை என வியப்புடன் கேட்க ஓ... அதுவா... அதை நீயே சென்று பார்... என சிரித்துக் கொண்டு சொன்னாராம் தர்மராஜா. சித்திரகுப்தன் ஓடிச் சென்று கிடங்கை எட்டிப் பார்த்தான் அங்கே... ஒருவர் வெளியே வர முயற்சிக்க அவரின் காலைப் பிடித்து இழுத்து விட்டு மற்றவர் தான் முயற்சிக்க.. இப்படியே ஒருவர் காலை ஒருவர் பிடித்து இழுப்பது நடந்து கொண்டே இருந்தது.

சி.சிவறீபன், புன்னாலைக்கட்டுவன்

Hi வியாசர் அங்கிள்...!

**அஜித், சூர்யா, விஜய், விக்ரம், தனுஷ் இவர்களில் நடிப்பு வசூல் ஆகியவற்றில் யார் முதலில் என்பதை கூறுங்கள் ப்ளீஸ்?**

நடிப்பிற்கு விக்ரம், சூர்யா, வசூலில் விஜய், அஜித் இவர்களுடன் ஒப்பிடும் அளவிற்கு தனுஷிடம் எதுவுமே இல்லை, இன்னும் வளர இடம் இருக்கிறது.

## தமிழனின் ஒற்றுமை பற்றி தங்கள் கருத்து....

### கொஞ்சம் சிரிங்கப்பா...




இரா.ஜெ.துஷ்யந்தா, சூராவத்தை

Mr.வியா அங்கிள்!

**இறந்த ஒருவர் அடுத்த பிறப்பு எடுத்து விட்டார் என்று நம்புகையில் அவருடைய ஆவி (ஆத்ம சாந்தி இல்லாமல்) அலைகிறது என்கிறார்களே இது பற்றி உங்கள் கருத்து?**

இறந்த ஆத்மாவை சாட்டி "சாந்தி" க்காக இன்னொருவன் இரவில் அலைகிறான் என்று அர்த்தம்.

## மகாபாரதத்தில் சிறந்த பாத்திரம் கர்ணனா? அல்லது கண்ணனா?

இ.இலக்கியா, சுழிபுரம் மத்தி.

அன்பு வியா மாமா!

**நட்பை பற்றி இதுவரை யாரும் கேட்டிராத பஞ்ச் Dialog ஒன்று சொல்ல முடியுமா?**

நாய் துரத்தும் போது விட்டு ஓடுபவன் வம்பன். அதை எதிர்த்து நிக்கிறவன் தான் நல்ல நண்பன்.

பொ. சாம், பருத்தித்துறை

**Hi Uncle**

**Friend க்கும் Best Friend க்கும் என்னதான் வித்தியாசம்?**

நீ சிரிக்கும் போது உன் சிரிப்பை ஏந்துபவன் Friend. நீ அழும் போது உன் கண்ணீர் துளிகளை ஏந்துபவன் Best Friend

கஸ்தூரியா, திருநெல்வேலி

**Hi வியா அண்ணா**

**மகாபாரதத்தில் சிறந்த பாத்திரம் கர்ணனா? அல்லது கண்ணனா?**

பாரதத்தில் கர்ணனின் கவச குண்டலத்தை தானமாக பெற சூழ்ச்சி செய்தது கண்ணன். போர்க்களத்தில் கர்ணனின் தேர்ச் சில்லு சகதியில் சிக்க வைத்தவன் கண்ணன்.

தேர்ச் சில்லை சகதியில் இருந்து வெளியே எடுக்க முற்பட்ட கர்ண னுக்கு போர் தர்மத்தை மீறி அர்ச்சு ணனை அம்பு எய்யச் சொன்னவனும் கண்ணன். உயிருக்காய் போராடிக் கொண்டிருந்த கர்ணனிடம் அந்தண வேடத்தில் வந்து அவன் செய்த புண் ணியங்களை வேண்டிச் சென்றதும் கண்ணன். இப்போது சொல்லுங்கள் யார் சிறந்தவர் என்று?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

**எங்கள் யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் இன்று வேகமாக மாசடைந்து வருகின்றது. அதைத் தடுக்க என்ன வழி?**

எதுவுமே செய்ய முடியாது. மக்களின் தேவையை நிவர்த்தி செய்ய ஒரே வழி இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு வருவதுதான். ஆனால் என்ன செய்ய அதுதான் நம் தமிழ்த்தேசிய அரசியலில் சிக்கித் தவிக்கிறதே!

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

அன்பின் வியாசரே!

**தொந்தரவும் தொல்லையும் பெண்ணுக்கு எப்போது ஆரம்பமாகிறது.**

மொட்டு பூவாகும் போது...

# அளுத்கம வன்முறை தொடர்பில் இதுவரை 55 பேர் கைதாகினர்

(கொழும்பு)

தூண்டிவிடும் கருத்துக்களை வெளியிடுவது தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை எனவும் சம்பவம் குறித்து மட்டுமே விசாரணை நடத்த முடியும் எனவும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பு அளுத்கம பிரதேசத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் காரணமான தூண்டி விடும் வகையிலான கருத்துக்களை தொடர்ந்தும் வெளியிட்டு வந்த நிலையில், அந்த அமைப்பின் தலைவர்களை ஏன் கைது செய்யவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸ்மா அதிபரிடம் கேட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் எந்த அமைப்பாக இருந் தாலும் எந்த தரத்தில் இருக்கும் நபராக இருந்தாலும் தவறு செய்திருந்தால் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுபல சேனா அமைப்பு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அளுத்கமவில் அமைதியான கூட்டத்தை நடத்தியிருந்தது.

அண்மையில் நடத்த அனுமதி வழங்கப்பட்ட கூட்டத்தை புத்தசாசன பாதுகாப்புச் அதிகார சபைக்கு நடத்தியது. பொதுபல சேனா அமைப்பு அனுமதி வழங்கவில்லை.

இந்த கூட்டம் நடைபெறுவத ற்கு முன்னர் பொலிஸார் பௌத்த மற்றும் முஸ்லிம் இரண்டு தரப்பினரையும் அழைத்து பேசியதுடன் எந்தவிதமான குழப்பமான நிலைமைகளும் ஏற்படாது என பொலிஸாருக்கு உறுதி வழங்கப்பட்டது.

எனினும் இந்த கூட்டத்தின் பின்னர், கூட்டத்துடன் தொடர்புடைய வாகனங்கள் தர்கா நகர் ஊடாக பேரணியாக சென்ற நிலையில் இந்த மோதல் ஆரம்பித்துள்ளது.

சம்பவங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய 55 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 48 பேர் சிங்களவர்கள். 7 பேர் முஸ்லிம்கள் எனவும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இனங்களிடையே நல்லுறவு ஏற்படுத்தப்பட வேண்டும்


## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.

இனங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில், இன மோதல்களில் ஈடுபடுவது காட்டுமிராண்டித்தனமான செயல் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் அனைத்து பகுதிகளிலும் சகல இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வத ற்கு அனைவ ரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இன முறுகல் ஏற்படும் இடங்களில் எல்லாம் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். ஒரு சிறு சம்பவ த்தை காரணம்காட்டி நாடு முழுவதும் பரவச் செய்வது மிகவும் மோசமான செயல்.

ஒவ்வொரு குடிமகனும், அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் பொறுமை காக்க வேண்டும். அப்பாவி மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிடுவது என்பது காட்டுமிராண்டித்த னமான செயல். இவ்வாறான செயல்களில் ஒருவரும் ஈடுபடக் கூடாது.

நடந்து முடிந்துள்ள சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வர வேண்டும். இனங்களுக்கு இடையே மீண்டும் புரிந்துணர்வை ஏற்படுத்த இருசாராரும் செயற்பட வேண்டும் என்றார். (அ)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வார நிகழ்வின் ஒரு பகுதியாக உடுப்பிட்டி ஆயுள்வேத வைத்தியசாலையின் நடமாடும் சேவை அண்மையில் உடுப்பிட்டி [illegible] தலைமகள் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றபோது...

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலரோ முகமோ

பூக்களும் தலை அசைக்கும்
அவள் புன்னகைக்கும் போதெல்லாம்
அவள் மழலையின் சாரல்பட்டு
குயில்களும் கவி மறக்கும்
அம்புலி கடன் கேட்கும்- அவள்
அமுதுண்ணும் பாத்திரத்தை
முகில்களும் ஒருதடவை அவள்
முகம்காண நின்று செல்லும்
பாதத்தின் வர்ணங்களில்
பட்டாம்பூச்சி மயங்கிச் சாயும்
எங்கள் துக்கத்தின் சிலுவை- அவள்
இன்பத்தின் பூபாளம்
இதழ் விரிந்த மலரல்ல- நாங்கள்
இளைப்பாறும் நந்தவனம்
எப்படி வந்தது
எங்கள் வீட்டுத் தொட்டிலில்
அந்தச் சித்திரைப் பௌர்ணமி

ஆர்.எஸ்.ஆனந்தன்
தும்பளை

## இமயம் தொட...

ஓடும் நதிகள்
ஓரிடத்தில் சங்கமிக்கும்
அதுபோல்தான் நீ
உன் கொள்கைகளை
ஒன்றிணைத்து
நதிகளின் சங்கமமாய் சங்கமி
விடுதலை என்பதில் -நீ
கோட்டையாய் இருக்காவிடினும்
சிறு கல்லாயாயினும் இருந்திடு

மாவை.நா. கஜேந்திரன்

## தொலைதூரம்

சாவு கடந்து சாகசம் செய்யும்
சாமியர் நாமல்ல என்றாலும்
சந்ததியாவது சந்தோசமாக
இருக்கவேண்டும் என்ற
சராசரி எண்ணம் தான் எமக்கும்

சூரியனை அக்னி தேவனுக்கு
அர்ப்பணிக்க எண்ணுகிறார்கள்
அற்பர்கள்... பாவம்
அவர்கள் அறியவில்லை
போலும்...

எம் திறமைகளை தீக்கிரையாக்க
முடியாது
எம் உரிமைகளை உடைத்தெறிய
முடியாது
எம்கேள்விகளை வேள்வி
செய்யமுடியாது
எல்லாம் எமக்கு புரிந்தாலும்கூட
ஒற்றுமை என்ற ஒன்று
இல்லாமல் இவையெல்லாம்
தொலைதூரம் தான் எமக்கு

அ.நளினாசினி
கோண்டாவில்

## இலக்கு

முட்கள் நிறைந்த பாதையில்
என் வெறுங்கால் பயணங்கள்
இன்னும் தொடர்கின்றது
காதல் என்னும் முடியாத
பாதையின் வழியே...!

முடிவு எதுவென்று
தெரியாமல் போனாலும்
உன் கால்தடம் பதித்த
வழி தொடர்வேன் நம்
காதல் எனும்
இலக்கையடைய...!

என்.அர்ச்சனா
நிதர்சன் கிறீம் கவுஸ்

## தடையில்லை

யானையைக் கொல்லத் தடை;
நாயைக் கொல்லத் தடை;
பலாமரத்தை வெட்டத் தடை;
பனை மரத்தை வெட்டத்தடை;
ஆனாலும் இப்போது
மனிதனை மனிதன் கொல்ல
தடையில்லை ஈழ தேசத்தில்;
அஃறிணைப் பொருட்களுக்கே
அனைத்துப் பாதுகாப்பும் இங்கே;
உயர்திணைப் பொருளுக்கோ
ஒரு தடையும் இல்லை இங்கே;

புத்தூர்
கு.குகன்



# கவிதைக் கலசம்

# மௌனத்தின் தேடல் – 209



## அன்னை அல்லவா?

பாசதீபம் மடியில்
காவல் தெய்வம் அருகில்
கஷ்டம் வந்தாலென்ன?
காலம் போனாலென்ன?
கால்கள் துவண்டாலென்ன?
கண்கள் இருண்டாலென்ன?
உயிரைக் காக்கின்ற தாயே!
என்றும்
உலகில் உயர்ந்தவள் நீயே!

வாணியழகன்
முரசுமோட்டை

## சிந்தித்தால்

எம்மை வளர்த்தெடுக்க
அன்னைபடும் பாட்டை
நாம் சிந்தித்தால்
முதியோர் இல்லங்களின்
வாசல்கள் மூடப்படும்
வானத்தில் தோன்றும்
விடிவெள்ளியாய்
வீட்டிலிருந்தே அன்னை
ஒளி கொடுப்பாள்

நடுப்பக்க நித்தி
தாவை

## கலியுகம்

பெற்ற பிள்ளையால்
கைவிடப்பட்டும்
தன் பேரப்பிள்ளையை
கைவிடாமல்
காத்துவரும் மூதாட்டிக்கு
காவலாய் இருக்கும்
நாயிடம் உள்ள
மனிதாபிமானம்
அவள் பெற்ற பிள்ளைக்கு
இல்லாமல் போனதே?

இ.இலக்கியா
சுழிபுரம் மத்தி

## பாதுகாப்பு

இளமையை இவ்வுலக
நன்மைக்காக
தொலைத்துவிட்டு
தேடுவதென்ன
கொள்ளுப் பேரன்
தூங்கிவிட்டாரா
பிள்ளையின் தாயை
எதிர்பார்க்கிறாயா பாட்டி

ஸ்ரீ.ஜஸ்வந்தினி

## புரிந்துணர்வு

இளமையிலும் தொண்டு
முதுமையிலும் தொண்டு
பெண் சமூகத்தை
வளர்க்கும் தாய்க்குலம்
நிரூபித்து விட்டீர்கள்
அல்லவா? பாட்டி
மடியில் கிடப்பது
கொள்ளுப்பேரன்
நீங்கள் சொல்லாமற்
தெரிந்து கொண்டேன்

த.வி.பரமசாமி
யாழ்ப்பாணம்

## அறியாப் பிஞ்சின் நிலை

அறியாத வயதினில் - நீ
ஏழையாய் பிறந்ததாலோ
உனக்கு இந்நிலை- நீ
தூங்கு கண்ணே - விதி
உன்நிலையை ஒருநாள் மாற்றும்

சி.சிவாஜினி
கோண்டாவில்

## பெருமூச்சு

போரின் வடுக்களால்
இழந்தாய் உன்
பெற்றோரை-ஆனாலும்
உடல் நெகிழ்வால்
இழக்கப்போகின்றாய் என்னை
நாளை யார் உனக்கு...?

அபிலாசா
யாழ்ப்பாணம்

## சொத்து

வாழ்வில் நரை
திரை கண்ட பின்பும்
ஏழ்மை கரை புரண்டோடும்
வெள்ளமாகியும்
மடியில் பிறை நுதலாள்
தந்த சொத்து
விடியல் இவனால் ஆகுமென்ன
விழித்திருக்கும் தமிழன்னை

செ.கிரியா
சுழிபுரம்

## தாயுள்ளம்

பெற்று வளர்த்த பிள்ளைகளால்
கைவிடப்பட்ட நிலையிலும்
பெற்றவர்களால்
கைவிடப்பட்ட குழந்தைக்கு
ஆதரவு கொடுக்கும்- இந்த
தாயின் உள்ளம் யாருக்கு வரும்?

இ.கிரிசாந்தன்
துன்னாலை

## பெற்றால்தான் பிள்ளையா?

துள்ளும் வயதுதனில் யாபேற்கும்
துடிப்புடன் சேவையாற்றியிருந்தேன்
தள்ளாத வயதுதனில் யாருமற்ற வேளை
தந்தானே கைதனிலே தவளுகின்றாயே
கள்ளங்கபடமில்லை உனைக்
கண்டெடுத்தேன் குப்பைதனுள்
உள்ளம் தளரவில்லை உந்தனை
உருவாக்கி நல்மனிதனாக்குவேன்
மகனே கலங்காதே


பொ.புனிதன், வரியப்புலம்

## தூரமும் துயரமும்

தூரத்துப்பார்வை குறைந்து வருவதால்
துயரப் பார்வைகள் பெருகி வருகின்றன
எதிர்காலத்தில் பேரன் உரிமையுறவை மறந்து
எடுப்பார் கைப்பிள்ளையாகி வடுவைச் சுமக்காதிருக்க
கடுமையாகப் பாடுபடும் மூதாட்டிசிறிதுமயராது
கண்காணிப்பிலும்கூட தனிக்கவனம் செலுத்துகிறார்
உயிர் உள்ளவரை இது தொடருமாம்

அரு.கனகராசா
சாவகச்சேரி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –210



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 25.06.2014 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மானிப்பாய் அந்தோனியார் திருத்தல வருடாந்த நவநாள் ஆராதனையின் திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் திருச் சொரூப பவனியும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அந்தோனியார் திருச்சொரூபம் வீதியுலா வருவதையும் புனிதரின் ஆசீர்வாதம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)



கோண்டாவில் ஸ்ரீ அற்புதநர்த்தன சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் உயர்த்தும் கரங்கள் கல்வி ஊக்குவிப்பு நிகழ்வில் கோண்டாவில் கிராமத்தில் வசிக்கும் வறிய மாணவர்களுக்கு கல்வியை ஊக்குவிக்கும் முகமாக மாதாந்த உதவிகள் வழங்கப்பட்டபோது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)




அருட்தந்தை ஸ்டீபன் அடிகளாரின் உயிர்ப்பதிவு (உணர்வுகளின் பதிவுகள்) நூல் வெளியீட்டு விழா அண்மையில் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறுவதை படத்தில் காணலாம். கண்கண்ட சாட்சியங்கள், தான் அனுபவித்த அனுபவப் பகிர்வுகள் என்பவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடே உயிர்ப்பதிவு எனும் நூல் என குறிப்பிடப்படுகின்றது. (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)


நிழல்கள்



திரிசாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் யாழ்.இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற போது... (படம் :- மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்.இந்துக் கல்லூரியின் 2005 பழைய மாணவர்களினால் பல்வேறு சமூக நல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக கிளி பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பெற்றோரை இழந்த 2 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் மற்றும் 10 மாணவர்களுக்கு வருடாந்த கல்வி ஊக்குவிப்பு தொகையாக தலா 500 ரூபாவையும் வழங்கியுள்ளனர். துவிச்சக்கர வண்டி வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.









எழுதுமட்டுவாழ் பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு விழா நடைபெற்ற போது... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.உதவியை நாடுகிறது ஆப்கான்



(காபூல்)

அண்மையில் நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறப்படுவதால் அதற்கான சுமுகமான முடிவை எடுக்க ஐ.நாவின் உதவியை நாடியுள்ளதாக ஜனாதிபதி கர்சாய் தெரிவித்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் நடைபெற்று வந்த தலிபான் தீவிரவாதிகளின் ஆட்சியை இறக்கி அங்கு ஜனநாயக ஆட்சி மலர உதவும் விதமாக நேட்டோ துருப்புகள் உள்ளே நுழைந்தன. அதன்பின்னர் அங்கு நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்து ஹமீத்கர்சாய் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

இரண்டு முறை ஜனாதிபதி பதவி வகித்துள்ள அவர் அங்குள்ள அரசியலமைப்பின்படி மூன்றாவது முறையாகத் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற விதி முறை உள்ளது.

எனவே இந்த ஆண்டு மே மாத இறுதியில் நடைபெற்ற புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் போட்டியிட்ட வாக்காளர்களில் அப்துல்லா, அஷ்ரப்கனி ஆகிய இருவரும் முன்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் இறுதி வேட்பாளரைத் தேர்வு செய்யும் இரண்டாவது சுற்று வாக்குப்பதிவு கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. இந்த சுற்றின் வாக்கு எண்ணிக்கையின் பூர்வாங்க முடிவுகள் ஜூலை மாதம 2ஆம் திகதியும் இறுதி முடிவுகள் 22ஆம் திகதியும் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான அப்துல்லா சமீபத்திய வாக்குப் பதிவின் முடிவுகளை தேர்தல் அதிகாரிகளும் மற்றவர்களும் தனக்கு எதிராகத் திருப்புவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையானது அமைதியான அதிகார மாற்றம் ஆப்கானிஸ்தானில் நடைபெறும் என்று எண்ணியிருந்த மேற்கத்தேய அதிகாரிகளுக்கு ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க ஐ.நாவின் உதவியை நாடும்விதமாக ஐ.நா அமைப்பின் அதிகாரிகளை சந்தித்துவிட்டு அப்துல்லாவிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளதாக ஜனாதிபதி கர்சாய் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு மதகுருமார்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதியை புதிய ஜனாதிபதி பதவியேற்பதற்கான காலக்கெடுவாகவும் தான் நிர்ணயித்துள்ளதை அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



ஜேர்மன் வந்திருந்த டென்மார்க் பிரதமர் ஹெல்லா த்ரோனிங்கை (வலது) பெர்லின் அரசு மாளிகையில் சான்சலார் ஏஞ்சலா மர்கெல் வரவேற்கும் போது...

# உக்ரைனில் தற்காலிக போர் நிறுத்தம்

(கீவ்)

உக்ரைன் அரசின் புதிய ஜனாதிபதி பெட்ரோ போராஷெங்கோ ஒருவார கால போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் பொருளாதார மேம்பாட்டிற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய உக்ரைன் முடிவெடுத்தபோது அந்நாட்டின் ரஷ்ய சார்பு ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் இதனை மறுத்தார். இதனால் ஏற்பட்ட போராட்டங்களில் அவர் பதவியை இழக்க நேரிட்டதுடன் உக்ரைனின் கிழக்குப் பகுதிகளில் ஒன்றான கிரிமியா ரஷ்யாவுடன் இணைந்தது.

இதனைத் தொடர்ந்து இன்னும் சில கிழக்குப் பகுதிகளும் ரஷ்யாவுடன் இணையவேண்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த போராட்டங்களை அடக்கி நாட்டில் அமைதியை நிலைநிறுத்த மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் அரசு முயற்சித்து வருகின்றது.

உக்ரைனின் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பிரிவினைவாதப் போராட்டங்களுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து இராணுவ உதவியையும் செய்து வருவதாக உக்ரைன் அரசு கருதுகின்றது.

எனவே அந்தப் பகுதியின் ரஷ்ய எல்லையைக் கட்டுக்குள் கொண்டு வர உக்ரைன் இராணுவம் முயற்சித்து வந்தது.

கிரெம்ளின் இந்த செய்தியை மறுத்தபோதும் எல்லைப் பகுதி பாதுகாக்கப்படுவதான ஒரு தகவலை தனது தளபதியிடமிருந்து உக்ரைன் ஜனாதிபதி பெற்றார்.

அதன்பின்னர் கிழக்குப் பகுதிகளில் ஒருவாரகால போர் நிறுத்தத்தை அவர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். இந்த அவகாசமானது அந்தப் பகுதிக்கான அமைதித் திட்டத்தை செயற்படுத்தக்கூடிய கால அவகாசததைத் தனக்குத் தரும் என்று அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் போராளிகள் தாக்கினால் இராணுவம் தங்களைத் தற்காத்துக் கொள்ளவேண்டும் என்றும் தங்களின் மாநிலப் பிரதேசத்தைக் காத்துக்கொள்ள தாங்கள் எந்தவித முயற்சியிலும் ஈடுபடுவோம் எனறு அவர் தனது இணையத்தளத் தகவலில் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க இராணுவத்தை அனுப்பமாட்டோம்

## ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கில் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிட மேலும் அமெரக்க இராணுவ வீரர்களை அனுப்ப மாட்டோம் என்று ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கு இராணுவ ரீதியாக உதவுவது குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களிடம் கடந்த வியாழக்கிழமை விவாதித்த பின்னர் செய்தியாளர்களிடம் ஜனாதிபதி கூறியதாவது,


ஈராக்கிற்கு அமெரிக்க போர் வீரர்களை மீண்டும் அனுப்பும் திட்டம் இல்லை. ஆனால், அந்த பிராந்தியம் மற்றும் அங்கு வாழும் அமெரிக்கர்களின் நலன் கருதி தீவிரவாதிகளை களையெடுக்க அந்நாட்டிற்கு பிற வகையில் உதவுவோம்.

அங்கு 10ஆயிரம் வீரர்களை அனுப்புவதாலேயே இந்தப் பிரச்னையை எளிதாக தீர்க்கக் கூடிய வலிமையை நாங்கள் பெற்றிருப்பதாக கருதவில்லை. ஏனெனில், அந்நாட்டில் தீவிரவாதத்தை ஒழிக்க ஏற்கெனவே அமெரிக்க வீரர்கள் பலரின் இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. நிதி விரயமாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை ஈராக் அரசே தீர்த்து க்கொள்ள வேண்டும்.

எனவே, அந்த நாடு இராணுவ உதவியை கேட்டுக் கொண்டாலும் எத்தகைய துல் லியமான தாக்குதல்களை மேற்கொள்வது என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது என்று ஒபாமா கூறினார்.

இதனிடையே, அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் ஈராக் அண்டு லெவண்ட் (இஸ்இஸ்) தீவிரவாதிகள் அலமுதான்னா இரசாயன ஆயுதத் தொழிற்சாலையை கைப்பற்றியுள்ளனர்.



ஆனால், தீவிரவாதிகளால் அங்குள்ள இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த முடியாது. ஏனெனில், அந்த ஆயுதங்கள் மிகப் பழைமையானவை மட்டுமின்றி, எளிதில் கையாள முடியாதவை ஆகும்.

இந்நிலையில் இ.எஸ்.இ.எல் தீவிரவாதிகளால் பிணைக்கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட 4 துருக்கியர்கள் உட்பட 48 பேர் கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், தீவிரவாதிகளால் கடந்த வாரம் கடத்திச் செல்லப்பட்ட 40 இந்தியர்கள் மற்றும் 40இற்கும் மேற்பட்ட துருக்கியர்கள் ஆகியோரின் கதி என்னவென்று நேற்று வரை தெரியவில்லை.

# பழங்குடியினர் வெளியேற்றம்




தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதல் என்ற பெயரில் பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் தீவிரவாதிகள் மீதான இராணுவத்தின் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதால் வடக்கு வசிரிஸ்தான் பகுதியை சேர்ந்த சுமார் இரண்டரை இலட்சம் பழங்குடியின மக்கள் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும், நாள்தோறும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெளியேறிய வண்ணம் உள்ளனர். லக்கி மர்வாத், பன்னு, டேரா இஸ்மாயில் கான் உள்ளிட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளில் தங்களது பெயர்களை பதிவு செய்து கொண்ட இவர்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அனைவருக்கும் போலியோ தடுப்பூசி போடுவதற்கான சிறப்பு முகாம்களுக்கும் அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## முன்னாள் பிரதமருக்கு சிறைத்தண்டனை

ஆயுத பேர ஊழல் வழக்கில் ஸ்லோவேனியாவின் முன்னாள் பிரதமர் ஜனெஸ் ஜன்ஸாவுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு நடந்த ஊழலில் தண்டனை பெற்றுள்ள ஜனெஸ் ஜன்ஸா சிறையில் அடைக்கப்பட்டார்.

இராணுவ ஆயுதங்கள் வாங்கியதில் பின்லாந்து நிறுவனத்திடம் இருந்து 16.2 கோடி ரூபா இலஞ்சம் பெற்றதாக இவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதுபோன்று இராணுவ இரகசியங்களை வெளியிட்ட குற்றத்துக்காக ஏற்கனவே 2 முறை இவர் [illegible] குறிப்பிடத்தக்கது.




# அகதிப் பெண்ணை மணம் முடிக்கும் டுபாய் இளவரசர்



டுபாய் நாட்டு இளவரசர் முகமது அல் மக்தும், தான் அகதி பெண் ஒருவரை திருமணம் செய்து கொள்ளப்போவதாக கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

பாலஸ்தீன நாட்டிலிருந்து காலிலா அரபு என்ற பெண் டுபாயில் அகதியாய் குடிபெயர்ந்து அந்நாட்டின் தலைநகர அருகே தெருவோரத்தில் வளர்ந்து வந்தார்.

கடந்தாண்டு மார்ச் மாதம் தலைநகர் அருகே உள்ள பின்தங்கிய பகுதிகளில அறக்கட்டளை பணிகளை டுபாய் மன்னர் ரஷீத் அல் மக்தும்மின் இரண்டாவது மகனான இளவரசர் முகமது அல் மக்தும் பார்வையிட வந்துள்ளார்.

அப்போது இப்பெண்ணை சந்தித்த அவர் காதல் வயப்பட்டுள்ளார். இதன் பின்னர் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியுள்ளனர். ஆனால், இப்பெண்ணை ஏற்க டுபாய் மன்னர் மறுப்பு தெரிவித்ததுடன, அவரை மணந்தால் சொத்தில் பங்கில்லை என கூறியதாகவும் முன்பு தகவல்கள் வெளியாகின. எனினும் தனது காதலில் நிலை யாக அல் மக்தும் இருந்ததால், தற்போது இவரின் திருமணத்திற்கு மன்னர் பச்சைக்கொடி காட்டியுள் ளார் என்று தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சி ஆர்ப்பாட்டம்

இந்திய மத்திய அரசின் புகையிரத கட்டண உயர்வை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் டில்லியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய மத்திய அரசு புகையிரத கட்டணத்தை கடுமையாக உயர்த்தி நேற்று முன்தினம் இரவு அறிவிப்பு வெளியிட்டது. இதில் பயணிகள் கட்டணம் 14.2 சதவீதமும், சரக்கு கட்டணம் 6.5 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதைக்கண்டித்து டில்லியில் நேற்று காங்கிரசார் புகையிரத பவன் முன் திரண்டு கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மத்திய அரசை கண்டித்தும் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதையொட்டி புகையிரத பவன் முன் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. போராட்டக்காரர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த தடுப்பை தாண்டி குதித்து செல்ல முயன்றனர்.

உடனே பொலிஸார் அவர்கள் மீது தண்ணீரை வேகமாக அடித்து கலைத் தனர்.

இதே போல் மத்திய பிரதேச மாநிலம் போபாலில் காங்கிரசார் புகையிரத கட்டண உயர்வை கண்டித்து போராட்டம் நடத்தினார்கள். அப்போது பிரதமர் மோடியின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டது.

இந்நிலையில் புகையிரத கட்டண உயர்வுக்கு தமிழ்நாட்டிலிருந்தும் பல அரசியல் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.



ஈராக்கில் சிக்கியுள்ள இந்தியர்கள் நலமுடன் நாடு திரும்ப வேண்டி குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் உள்ள மசூதியில் சிறப்பு தொழுகை நடந்தபோது...

# ஈராக்கில் உள்ள இந்தியர்களை சவுதி அரேபியா வழியாக மீட்கமுடிபு

(சண்டிகர்)

உள்நாட்டுப் போரால் அமைதியிழந்து காணப்படும் ஈராக்கில், வெளிநாட்டவர்களின் பாதுகாப்பு குறித்து அச்சம் எழுந்துள்ளது.

எனவே இந்தியாவைச் சேர்ந்தவர்களை பத்திரமாக மீட்க இந்திய அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் உள்நாட்டு போர் காரணமாக இந்திய தொழிலாளர்களும் நர்சுகளும் வெளியேற முடியாமல் சிக்கியுள்ளனர்.

தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் சண்டை நடப்பதால் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தியர்கள்ள மீட்க அங்குள்ள தூதரகம் மூலம் மத்திய அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இதேவேளை 16 இந்தியர்கள் மீட்கப்பட்டு வேறொரு இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

விமான போக்குவரத்து இல்லாததால் அவர்களை சவுதிஅரேபியா வழியாக இந்தியாவுக்கு அழைத்து வர மத்திய அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இதே போல் மற்றவர்களையும் சவுதிஅரேபியா உதவியுடன் மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

இந்நிலையில், பஞ்சாப் மாநிலத்தவர்களை மீட்டு அங்கிருந்து இந்தியாவிற்கு பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான செலவை ஏற்க பஞ்சாப் மாநில அரசு முடிவு செய்துள்ளது.

ஈராக்கில் உள்ளவர்களுக்கு இங்கிருக்கும் உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசும் தொலைபேசி கட்டணத்தையும் வழங்க முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் முடிவு செய்துள்ளார்.

அங்குள்ள ஒவ்வொரு இந்தியனும் பாதுகாப்பாக வெளியேறுவதை இந்தியா உறுதி செய்ய வேண்டும்.

அத்துடன் முறையான போக்குவரத்து ஆவணங்கள் மற்றும் குடியேற்ற பத்திரங்களை பொருட்படுத்தாமல் அவர்கள் மீட்கப்பட வேண்டும்" என்று அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# வ்ளம் கொடுத்த திருக்குறள்-அப்துல்கலாம்

(சென்னை)

எனக்கு மிகவும் பிடித்த நூல் திருக்குறள் என்று கூறியுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அறிவு அற்றம் காக்கும் கருவி என்ற திருக்குறளே என் வாழ்விற்கு வளம் கொடுத்த குறள் என்று குறிப்பிட்டுள்ளார்.

'தினமணி'யும் சென்னை பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் இரண்டு நாட்கள்"தமிழ் இலக்கியத் திருவிழா"வை முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் நேற்று காலை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.


அப்போது, எனக்கு மிகவும் பிடித்த நூல் திருக்குறள். அதிலும் ஒரு குறள் எனது வாழ்வுக்கு வளம் சேர்த்தது. அது என்ன வென்றால்,

'அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள் அழிக்கல் ஆகா அரண்'

இந்த குறள்தான் என் வாழ்விற்கு வளம் கொடுத்தது. இதன் பொருள் அறிவு என்பது அழிவுவராமல் காக்கும் கருவியாகும்.

மேலும் பகைவராலும் அழிக்க முடியாத எத்தகைய சூழ்நிலையிலும் அரண் போல அதாவது கோட்டை போல காத்து நிற்கும் என்பதாகும்.

பூமிக்கு மேலே, பூமிக்கு கீழே, பூமியில் என எந்த விதத்தில் எந்த அழிவு ஏற்பட்டாலும் அறிவை அழிக்க



இயலாது என்பது உண்மை.

இந்தியா 60 கோடி இளைஞர்களைப் பெற்ற நாடு. மக்கள் தொகை தான் இந்தியாவின் மிகப் பெரிய பலமே.

உறக்கத்திலேயே காண்பது கனவு அல்ல. உங்களை உறங்க விடாமல் செய்வது தான் கனவு. கனவு காண்பது என்பது ஒவ்வொரு இளைஞர் வாழ்விலும் கடமையாகும்.


அந்த கனவை நிறைவேற்றுவதை இலட்சியமாகக் கொள்ள வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். விடாமுயற்சியோடு செயற்பட வேண்டும்.

தோல்வி மனப்பான்மைகளை தோல்வி அடையச் செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தியா பலமான வளர்ந்த நாடாகும்.

அனைத்து இந்திய மக்களுக்கும் வாழ்த்துக்கள் என்று கூறி தனது சிறப்புரையை முடித்துக் கொண்டார்.

# சீன எல்லையில் மக்கள் குடியேற்றம்

## இந்திய மத்திய அரசு முடிபு



(புதுடில்லி)

இந்தியா - சீனா எல்லையோர மாநிலமான அருணாச்சல பிரதேசத்தில், உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளவும், எளிதில் அணுகமுடியாத அந்த பகுதியில் மக்களை குடியமர்த்தவும், இந்திய மத்திய அரசு, கூடுதலாக, 5,000 கோடி ரூபாய் ஒதுக்க முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் அந்த பகுதியில், சீன அத்துமீறலை முடிவுக்கு கொண்டு வர, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது.

அயல் நாடுகளுடன் இணக்கமான நல்லுறவு கொள்ள வேண்டும் என்பதுதான், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை. இந்த கொள்கை தான், நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது.

ஆனால் 1962இல், சீனாவுடன் நடை பெற்ற போரில், தோல்வி அடைந்தது. அதையே வாய்ப்பாக பயன்படுத்தி, சீனா, இந்திய எல்லையோர மாநிலங்களை, தன் மாநிலம் என கூறிவருகிறது.

குறிப்பாக, அருணாச்சல பிரதேசத்தின் பல பகுதிகளை, தங்கள் பகுதி எனக் கூறும் சீனா, அவ் வப்போது தன் இராணுவவீரர்களை அனுப்பி, அத்துமீறலிலும் ஈடுபட்டு வருகிறது.

இதற்கு என்ன காரணம் என யோசித்த இந்திய மத்திய அரசு, அந்தப் பகுதிகளில், இந்திய மக்கள் குடியேற்றம் இல்லாதது தான் முக்கிய காரணம் என்பதை கண்டறிந்தது.

இந்தியா - சீனா எல்லையில், அருணாச்சல பிரதேச மாநிலத்தில், 50 கி.மீ., தள்ளி தான் மக்கள் குடியேற்றம் அமைந்துள்ளது.

இதை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சீனா, எந்த அதிகாரபூர்வ ஆதாரங்களும், அறிவியல்பூர்வமான தகவல்களும் இல்லாமல், அருணாச்சல பிரதேசத்தின் பல பகுதிகளை தங்கள் பகுதி என தெரிவித்துவருகிறது.

இதை தகர்க்க நினைத்த, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு, எல்லையில் மக்களை அதிக அளவில் குடியேற்ற முடிவு செய்து, அதற்கான அடிப்படை கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள, 28 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தது. அந்த தொகையை கொண்டு, அணுகுவதற்கு சிரமமாக உள்ள அந்த பகுதியில், வீதி வசதி, தகவல் தொடர்பு வசதி, குடிநீர் வசதி, பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

இந்திய எல்லையில், 50 கி.மீ., தூரத்தை கண்டு கொள்ளாமல் விடுவதால் தானே, சீனா அந்த இடங்களை தன் பகுதி என சொந்தம் கொண்டாடுகிறது என்பதை அறிந்த மத்திய அரசு, கூடுதலாக 5,000 கோடியை ஒதுக்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

எனினும், இதற்கான முறையான நிதி ஒதுக் கீடு, அடுத்த மாத பட்ஜெட்டில் வெளியிடப்படும்.

முந்தைய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, இந்தியா - சீனா எல்லை பாதுகாப்புக்கு, எவ்வித முயற்சிகளும் எடுத்ததில்லை என்பது அருணாச்சல பிரதேச மாநில மக்களின் குறையாக இருந்தது.

இது தான், அந்த மாநிலததில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட, பா.ஜவின் பிரசார யுக்தியாகவும் இருந்தது.

"எல்லையில் பாதுகாப்பை உறுதி செயவோம் அருணாச்சல பிரதேசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்" என மோடி மேற்கொண்ட பிரசாரத்தால் தான் அந்த மாநிலத்தில் நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில், பா.ஜவுக்கு, ஒரு எம்.பி., இடம் கிடைத்தது.

இந்திய எல்லைக்குள் நுழைந்து, பல நாட்களாக முகாமிட்டு, இராணுவ பயிற்சிகள் மேற்கொண்டு, அவ்வப்போது அத்துமீறலில் ஈடுபடுவது சீனாவின் வழக்கம்.

அத்தகைய நேரங்களில் இரு நாடுகளின் இராணுவத் தளபதிகளும் [illegible] தக்கது.





# பாராளுமன்றில் உரையாற்ற மோடிக்கு அமெரிக்கா அழைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்ற கூட்டு கூட்டத்தில் உரையாற்ற பிரதமர் மோடிக்கு அந்நாட்டு எம்.பிக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்திய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர், அவரை அமெரிக்காவுக்கு வருமாறு அந்நாட்டு அரசு அழைப்பு விடுத்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மோடிக்கு வாழ்த்து தெரிவித்தார். இரு நாட்டு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஒபாமா மோடிக்கு நேரடியாக அழைப்பு விடுத்தார்.

கடந்த 2002இல் நடந்த குஜராத் கலவரத்திற்குப் பின்னர் தொடர்ந்து பல ஆண்டுகளாக மோடிக்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்து வந்த நிலையில், மோடியின் வெற்றிக்குப் பின்னர் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், அமெரிக்க பாராளுமன்றத்தின் கூட்டு கூட்டத்தில் உரையாற்ற வருமாறு அந்நாட்டு எம்.பிக்கள் மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரசை சேர்ந்த வெளியுறவுத்துறை குழுவின் த்லைவர் இடி ராய்ஸ் மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

செப்டெம்பரில் நடைபெறும் ஐ.நா., பொதுச் சபை கூட்டத்தில் மோடி பங்கேற்பார் என செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அச்சமயம், மோடி ஒபாமாவை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிப்பாரின்றிக் ஏமாரா மன்னன்
கெடுப்பாரின்றிக் கெடும்.
– திருக்குறள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கை கடற்படை மீது தமிழகத்தில் வழக்குப் பதிவு

இராமேஸ்வரம் மீனவர்கள் நடுக் கடலில் மீன்பிடித்த போது எல்லை தாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டு விரட்டியடித்தனர். அவர்களின் தாக்குதலில் இராமேஸ்வரம் மீனவர்களின் விசைப்படகுகள் சேதம டைந்தன.

படகுகள் உடைந்து கடலில் மூழ்கிய தால் அதில் இருந்த மீனவர்கள் சீரிஸ், பாஸ்டன், ஜான்பால், கீதன், சென்ரின் ஆகியோர் கடலில் குதித்து தத்தளித்தனர். அவர்களை மற்ற படகுகளில் இருந்த மீனவர்கள் காப்பாற்றி கரைக்கு அழை த்து வந்தனர்.

இலங்கை கடற்படையினர் தாக்கு தலில் உடைந்த படகின் உரிமையாளராக பவியான், சம்பவம் குறித்து மீன்பிடித்துறை அதிகாரிகளிடமும், மண்டபம் கடற்படை பொலிஸிலும் முறைப்பாடு செய்தார்.

இதன் அடிப்படையில் இலங்கை கடற் படையினர் மீது மண்டபம் மரைன் பொலி ஸார் கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்துள்ளனர். தமிழக மீனவர்களின் சொத்துக்களை சேதப்படுத்தியது, ஆயு தங்களை காட்டி மிரட்டியது, மீனவர் களை கொலை செய்ய முயற்சித்தது போன்ற பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்ப ட்டுள்ளது. (எ-11)

## பிதாமகர் வீஷ்மர் போரில் மாண்டது ஏன்?

இதிகாசங்கள் நம் வாழ்வுக்கு தர்மவழியினை காட்டி நிற்பன. கூடவே தர்மம்– அதர்மம் என் பனவற்றின் மோதலில் தர்மம் நிலைபேறு அடை யும் என்பதையும் அதர்ம வழி நின்றோர் அடியோடு அழிவர் என்பதும் இதிகாசங்களின் ஊடாக தெளிவுபடுத்தப்படுகின்றது.

எனினும் அதர்மத்தில் நம்பிக்கை வைப்பவர் களே நம் நாட்டில் அதிகமாக இருப்பது வேதனை தருவதாகும். அதர்மத்தின் வழி நிற்பது மட்டு மல்ல; அதர்மத்திற்கு துணைபோவது, இது அதர்மம் என்று சுட்டிக் காட்டத் தவறுவது என்பன கூட, அழிவைத்தரும் என்பதற்கு நல்ல உதார ணம் பிதாமகர் வீஷ்மர்.

மகாபாரதத்தில் பாரத பூமியை ஆள வேண்டி யவர் பிதாமகர் வீஷ்மர் ஆவார். எனினும் தன் தம்பியர் ஆட்சி புரிவதற்காக தன் ஆட்சித் தலை மையை விட்டுக் கொடுத்து போர்த் தளபதியாக இருந்தவர்.

பாண்டவர்களுக்கு உரிமை கொடுக்க கௌரவர் கள் மறுத்த போதும், சகுனியின் சூட்சியின் போதும் பிதாமகர் வீஷ்மர் அமைதியாக இருந்தார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கௌரவர் சபையில் பாஞ்சாலி துகில் உரியப்பட்ட போது அந்தோ! கொடுமை! கொடுமை! துரியோதனா! நீயும் நின் கிளையும் அழியும் வகையில் அநீதி செய்கிறாய் என்று சொல்வதற்கு வீஷ்மர் மறந் தார்–மறுத்தார்–மனமின்றி இருந்தார்.

தர்மங்கள், வேதங்கள் அனைத்தையும் அறிந்த வீஷ்மர், ஒரு பெரும் அநீதி நடந்தபோது அமைதியாக இருந்தது ஏன்? என்பதில் நமக்குக் குழப்பம் இருக்கவே செய்கிறது.

கைகேகி தலைவிரி கோலம் கொண்டதால் இராம–இராவண யுத்தம் நடந்தது. கண்ணகி தம் தலைமுடி அவிழ்ந்ததால் பாண்டிய நாடு பற்றி எரிந்தது.

இப்போது திரௌபதையின் கூந்தல் அவிழ்ந்து குழம்பினால்தான் துரியோதனன் குழாம் அழியும் எனவும் அந்தச் சந்தர்ப்பம் ஏற்படுவதற்காகவே வீஷ்மர் மௌனமாக இருந்தார் என்றும் நம் சிற்றறிவு சிந்திக்கிறது.

இருந்தும் பாரதப் போர்க்களத்தில் வீஷ்மர் இறந்து போகிறார்.

அதேசமயம் தன் மகன் செய்வது அநீதி என்று அறிந்தும் அதனைத் தடுக்கத் திராணியற்ற திரு தராட்டிரன் உயிரோடு இருக்கின்றார். திருதராட் டிரன் உயிரோடு இருக்க, வீஷ்மர் கொல்லப்பட்டது ஏன் என்ற கேள்விக்குப் பதில் காண்பதும் இங்கு அவசியம்.

திருதராட்டினன் கண் தெரியாதவன். திரௌபதி மானபங்கப்படுவதை அவனின் இருள் சூழ்ந்த கண்கள் காணப்போவதுமில்லை. அதன் அவலம் குறித்து உணரப்போவதுமில்லை. ஆனால் போர்த் தளபதியான வீஷ்மரின் நிலை அதுவன்று. சந்திர வம்சத்து அரசைக் காப்பதே தன் கடமை என்று இருந்த வீஷ்மர்,

துரியோதனன் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதையும் தன் கடமையாகக் கொண்டி ருக்க வேண்டும்.

சபை முன்னே திரௌபதி இழுத்து வரப்பட்ட போது– அவளின் துகில் களையப்பட்டபோது, வீஷ்மர் தன் ஆயுதத்திற்கு வேலை கொடுத்தி ருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யாமல் அவர் மௌனமாக இருந்தார். அதுவே அவர் செய்த மகாதவறு. இதன் காரணமாகவே அவர் போர்க்களத்தில் உயிர் துறந்தார்.

ஆக, தளபதிகள் படையினர் என்போர் நாட் டைக் காப்பாற்றுபவர்கள். அவர்கள் அரசுக்கு ஆதரவாக இருத்தல் என்ற நிலைமையை மாற்றி; நாட்டிற்கு, நாட்டு மக்களுக்கு, தர்மத்திற்கு காவ லர்கள் என்பதாகத் தம்மை மாற்றிக் கொண்டால், அவர்களுக்கு எந்தத் தீங்கும், எந்த விசாரணை யும் ஏற்படாது என்பது வீஷ்மரின் வரலாறு உல கிற்கு உணர்த்தும் தத்துவமாகும்.

## சைக்கிளில் இருந்து விழுந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியுடன் வீதியில் சறுக்கி விழுந்த 9 வயதேயான மாண வன் ஒருவன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் நள்ளிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் பரிதாபமாக உயி ரிழந்துள்ளான்.

முல்லைத்தீவு உப்புப்புலம் பகுதி யில் கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 2.15 மணியளவில் மேற்படி விபத்துச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.இதில் படுகாய மடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மாணவன் மறுநாள் 20 ஆம் திகதி பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச் சைக்காக மாற்றப்பட்டிருந்தான். இந் நிலையில் சிகிச்சை பலனின்றி அன்று நள்ளிரவு 11.40 மணியளவில் உயிரிழ ந்துள்ளான்.

முல்லைத்தீவு உப்புக்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்று வந்த சுப்பிரமணியம் சுபேந்திரன் (வயது-9) என்ற மாணவனே உயிரிழ ந்தவராவார்.

சம்பவ தினத்தன்று பாடசாலைக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்த மாணவன வீட்டிலிருந்த துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு வீதியில் சென்றுள் ளான். வீதியின் ஏற்றமான பகுதியில் மிக வும் வேக மாக துவிச்சக்கரவண்டியை செலுத்திக்கொண்டு வந்தவேளை துவி ச்சக்கரவண்டியை நிறுத்த பிரேக் பிடித் து ள்ளான். துரதிர்ஷ்டவசமாக பிரேக் பிடிக்கவில்லை. இந்நிலையில் காலி னால் பிரேக் பிடிக்க முயற்சித்துள்ளான். இருப்பினும் அந்த முயற்சி பயனளிக்க வில்லை. இந்நிலையில் முன்சில்லு சறு க்கி வீதியில் விழுந்துள்ளான். இதனால் படுகாயமடைந்த மாணவனை உடனடி யாக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி உயி ரிழந்துள்ளான். மாணவனின் மரணம் தொடர்பான விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். பிரேத பரிசோதனையின் பின் சடலம் உற வினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(எ-6)

## தாச்சிப் போட்டி

தாவடி காளியம்பாள் விளையாட் டுக் கழகம் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற வுள்ளது.

தாவடி காளியம்பாள் விளையாட் டுக் கழக மைதானத்தில் இடம்பெறவு ள்ள இறுதிப் போட்டியில் ஆலடி சிந்து அணியும் மயிலிட்டி வள்ளுவர் அணி யும் மோதவுள்ளன. முன்னதாக இடம் பெற்ற முதலாவது அரையிறுதிப் போட் டியில் ஆலடி சிந்து அணியும் புதும டம் வைகறை அணியும் மோதின.

இதில் ஆலடி சிந்து 5:4 என்ற அடிப் படையில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அதேபோன்று மயி லிட்டி வள்ளுவர் அணியும் மயிலிட்டி கண்ணகி அணியும் மோதிய இரண்டா வது அரையிறுதியில் மயிலிட்டி வள்ளுவர் 15:3 என்ற அடிப்படையில் வென்று இறு திப் போட்டிக்கு முன்னேறியது. (எ-23)

## அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி வடக்கு மீசாலை இலுவம் செல்வ விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்ப மாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற வுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சப் பறத் திருவிழா இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா இடம் பெற்று மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை யினர் அறிவித்துள்ளனர். (அ-29)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை



வித்தார மாகக் கதைபேசிக் கொள்ளுவோம்
வீணருடன் கூடி விளையா டுகிறோம்
சத்திசிவம் ஒன்றான தன்மையைக் காணோம்
சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை

குழந்தை யன்போடுநாம் கும்பிடமாட்டோம்
கூக்குரல் போட்டுநாம் கும்பிட்டுக் கொள்ளுவோம்
தளர்ந்துபோன அடியவரைத் தாங்குகி றோமில்லைச்
சற்குரு பாதத்தை வணங்குகி றோமில்லை

# இயேசுவின் திருஉடல், திரு இரத்த விழாவை சிறப்பாக கொண்டாட மனமாற்றம் பெறுவோம்

இயேசு தமது மரணத்திற்கு முந் திய கடைசி இராப்போசனத்தின்போது அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர் வதித்து தமது திருவுடலையும், இரத்தத் தையும் நமக்குங்கூட உணவாகத் தருகிறார். அவரது பேரன்பைப் போற்றி இன்றும் அதை நாம் எண்ணி தொடர் ந்தும் ஒரு பெருவிழாவாகக் கொண் டாடி வருகிறோம்.

இரத்தம் சிந்துதல் தியாகத்தின்

## பரமபிதா காட்டிய பாதை


அடையாளம். "இரத்தம் சிந்துதல் இன்றி பாவ மன்னிப்பு இல்லை". எனவே, எமக்காக தன்னை கையளித்த இயேசு வின் உடலுக்கும் இரத்தத்திற்குமான பிரதியுபகாரமாக நமது உடலை இறை வனின் திருவுளத்தை நிறைவேற்ற நாம் கையளிப்போம். நாம் இரத்தத்தைச் சிந் தாவிட்டாலும், பிறர் வாழ தியாகங்கள் செய்ய முன்வருவோம்.

அபபோசகர்களுக்கு பகிர்ந்து அளித்த தன் மூலம் இயேசுநாதர் அப்போது ஆரம்பித்துவைத்த அவரது இந்நற் கருணை திருவிருந்து பல நூற்றாண் டுகளாக ஒவ்வொரு நாளும் தொடர்ந் தும் இடம்பெற்றே வருகிறது. இதில் நம்பிக்கையுடன் பங்குபற்றி வரும் எத்தனையோ மக்களுக்கு அதுவே நல் ஆரோக்கியமளிக்கும். உடல் உள போசா க்காகவும் இருந்து வருகிறது. இதற்கான பல உண்மைகள் வரலாற்றில் உள்ளன. அவற்றில் ஒன்று பின்வருமாறு.

பாத்திமா நகரிலிருந்து சிறிது தொலை விலுள்ள பலசார் என்ற இடத்தில் 1904 இல் பிறந்து 1955இல் இறந்த அலெக் சாண்டிரியா என்ற பெண் ஒரு விபத் தான சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்து 13 ஆண்டுகள் நற் கருணை மட்டுமேபெற்று வாழ்ந்தது மருத்துவர்களை ஆச்சரியத்துள்ளாக்கி யது என்பது ஒரு வரலாற்றுப் பதிவாகி யுள்ளது. விசுவசித்தால் இத்திருவிரு ந்து தொடர்ந்தும் எம் எல்லோரையும் எப்போதும் தொடும், தொட்டு எம்மைக் குணமாக்கும்.

இவ்விதமாக நற்கருணையின் எண்ணற்ற அற்புதங்களை நாம் அறிந் திருக்கின்றோம். இவைகளெல்லாம் இதுவே நம் வாழ்நாள் முழுவதும் தொடரும் திருவிருந்து என வெளிப்ப டுத்துகின்றன.

இயேசு தமது இறுதி இராப்போச னத்தின்போது அப்பத்தையும் இரசத் தையும் தமது உடலும் இரத்தமும் எனக் கூறி அதனை தம் சீடர்களுக்குப் பகிர்ந்தளித் தார். அப்பம் ஏந் தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பகிர்தலின் ஞாபகம் நமக்கு உணர்த்தப்படுகிறது. எனினும் அப்போது எம் மன நிலையில் மாற்றம் ஏற்படுகிறதா என்பதே நாம் சிந்திக்க வேண்டியது. ஏனெனில் பகிர்தல் வாழ் வுக்கு மனநிலை மாற்றம் மிக அவசி



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

யம். கல்மனம் படைத்தவர்களால் பகிர்ந்து வாழமுடியாது. அப்பத்தின் வடிவில் இயேசுவின் உடலையும் இரசத்தின் வடிவில் அவரது இரத்தத் தையும் பகிர்ந்து உண்ணும் நாம் அவரது திருவுளப்படி வாழ முற்படுகி றோமா? நம்மில் அதற்கான மனமாற் றம் ஏற்படுகிறதா என்பதையும் சிந்திக்க வேண்டும். இத்தகைய சிந்தனைகள் ஏற்படுத்தும் மாற்றமே இப்பெரு விழாவை அர்த்தமுள்ளதாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; பற்றிக்ஸ், திருக்குடும்ப கன்னியர்மடம் சம்பியன்













வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆண்களுக்கான போட்டியில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும். பெண்களுக்கான யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடமும் சம்பியனாகின.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 5 கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும். மூன்றாம் கட்டப் போட்டிகள் வவுனியா மாவட்டத்திலும் நடைபெற்று முடிந்த நிலையில் 4 ஆம் கட்டப் போட்டிகள் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் 19 வயதுப்பிரிவு ஆண்கள். பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த 16 ஆம் திகதி முதல் இடம்பெற்று வந்தது.

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலிடத்தினையும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் முதலிடத்தினையும். மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும். கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்தினையும் பெற்றன. (க-

### வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# பளு தூக்குதல் சுற்றுப் போட்டி; யாழ். இந்துக் கல்லூரி முதலிடம்




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் பளுதூக்கும் போட்டியில் (Weight Lifting) யாழ் இந்துக் கல்லூரி பளுதூக்கும் அணியினர் 12 தங்கம். 7 வெள்ளி. 9 வெண்கலப் பதககங்கள் அடங்கலாக 28 பதக்கங்களினை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

சென்ற வருடம் இடம்பெற்ற போட்டியில் 12 பதக்கங்களினை மட்டுமே பெற்றுக் கொண்ட போதிலும் இவ்வருடம் 28 பதங்களினைப் பெற்று வடமாகாணத்தில் பளுதூக்கும் போட்டியில் முன்னிலை வகிக்கின்றனர்.

17 வயது பிரிவினில் 20 பதக்கங்களினையும்.19 வயது பிரிவினில் 8 பதக்கங்களினையும் பெற்று பளுதூக்கும் போட்டியில் வடமாகாணத்தில் முன்னிலை வகிக்கின்றது.

போட்டியாளர்களினை பெறுப்பாசிரியரும் பயிற்சியாளருமாகிய திருமாறன் தயார்படுத்தினார்.

வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள்.

17 வயது பிரிவு

**0-45 kg** எடைப்பிரிவில் ஏ.அபிராம் முதலாமிடத்தையும் ஜே.திர்சாந் இரண்டாமிடத்தையும் எஸ்.லகிர்தன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**45-50 kg** [illegible] முதலாமிடத்தையும் ரி.கோபிநாத் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**50-56 kg** எடைப்பிரிவில் ரி.விதுசன் முதலாமிடத்தையும் யு.சுயந்தன் இரண்டாமிடத்தையும் ஜி.ஜெகஜீவன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**56-62 kg** எடைப்பிரிவில் ஏ.எட்வின்யூட் முதலாமிடத்தையும் எஸ்.சிவவிஷ்ணு இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**62-69 kg** எடைப்பிரிவில் ரி.பபிலன் மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**69-77 kg** எடைப்பிரிவில் ஆர்.பிரகலாதன் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**77-85 kg** எடைப்பிரிவில் எஸ்.விதுன் முதலாமிடத்தையும் ரி.இன்பராஜ் இரண்டாமிடத்தையும் எஸ்.திசாந் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**85-94 kg** எடைப்பிரிவில் எஸ்.சபிதன் முதலாமிடத்தையும் எஸ்.சிவரூபன் இரண்டாமிடத்தையும் கே.சிறீசன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**94 kg** எடைப்பிரிவுக்கு மேல் எஸ்.மைத்திரிசர்மா முதலாமிடத்தையும் எஸ்.ஜதீபன் மூனறாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

19 வயது பிரிவு

**56 kg** எடைப்பிரிவில் எஸ்.பிரகலாதன் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**62 kg** எடைப்பிரிவில் எம்.சரணியன் இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**67 kg** எடைப்பிரிவில் எம்.ஶ்ரீகௌதம் இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**77 kg** எடைப்பிரிவில் வி.லக்ஷன் மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**85 kg** எடைப்பிரிவில் எஸ்.அபிசேக் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**94 kg** எடைப்பிரிவில் வி.வித்திய பிரகாஸ் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**94-105 kg** எடைப்பிரிவில் எஸ்.சந்திர மௌலீசன் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

**105 kg** எடைப்பிரிவுக்கு மேல் எஸ். கிருசிகன் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டார். (க-23)

## இன்றைய போட்டிகள்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஹென்றீசியன் பிறிமியர் லீக் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹெனறியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகள் வருமாறு.

முதலாவது போட்டியில் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாவத்தை விளையாட்டுக் கழகமும் இரண்டாவது போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் மூன்றாவது போட்டியில் கலை ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவஜீவன் விளையாட்டுக் கழகமும் நான்காவது போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றோபல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்புச்...

புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கடும்போக்கு அமைப்புக்களுடன் தொடர்புகளை பேணி வரும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களைக்கொண்டு இந்த படுகொலை முயற்சி முன்னெடுக்கப்பட விருந்தது.

மலேசியாவில் உள்ள புலிப் புலனாய்வு பிரிவு உறுப்பினர் ஒருவரே இந்த திட்டத்தை வகுத்துள்ளார்.

கொலை முயற்சியுடன் வெளிநாட்டு உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது என பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பிரசுரமாகவுள்ள சிங்கள வார இதழ் ஒன்றின் பிரதான செய்தியாக இந்தத் தகவல் வெளியிடப்பட உள்ளதாக சிங்கள இணையமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (எ-11)

## மட்டு.காட்டில்...

தீ வைத்தபோதே மேற்படி ஆயுதங்கள் வெளிப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்தே குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் தெரிவித்தனர். (எ-11)



ஹொண்டுராஸ் அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில் ஈகுவடோர் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

## போருக்குப் பின்னரான...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது, போர் முடிவுக்கு வந்த பின்னர் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றாமை தொடர்பில் ஐ.நா உயரதிகாரிகள் குழுவுக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக, போர் முடிவுக்கு வந்த பின்னர் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளின் பிரகாரம் மூன்று முக்கிய விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்தவிடங்களில் மீளக்குடியமர்த்தி, அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் சுயமாக வாழ்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல்.

இலங்கையில் நீண்ட காலமாக காணப்படும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுதல் ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் பொறுப்பான வகையில் நிறைவேற்றப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஐ.நா உயரதிகாரிகள் குழுவுக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

அத்துடன், வடமாகாண சபையைச் சுதந்திரமாக இயக்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், இலங்கை அரசாங்கம் வடபகுதிக் காணிகளை சுவீகரிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் இலங்கை படைத் தரப்பினரின் தலையீடுகளால் மக்களுக்கு ஏற்படும் நாளாந்தப் பிரச்சினைகள் குறித்து வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐ.நா உயரதிகாரிகள் குழுவுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

அதேவேளை, இவ்விரு தரப்பினருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு இன்றும் தொடர்ந்து இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## கிரிக்கெட் இறுதிப் போட்டி யாழ்.பல்கலை- யாழ்.சென்றல்

## இன்று பலப்பரீட்சை





யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் அணி மோதவுள்ளது. (கு)

## முல்லைத்தீவிலிருந்து...

சென்றுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி பகுதியில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் படகு மூலம் இலங்கையில் இருந்து வந்ததாக அந்த பகுதியை சேர்ந்த மீனவர்கள் கடலோர காவல்துறைக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த கடலோர காவல்துறையினர் இலங்கையில் இருந்து வந்தவர்களை முகுந்தராயர் சத்திரம் காவல்துறை சோதனை சாவடிக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது,

தனது மனைவி செல்வி குரூஸ் கிட்னி பாதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு கிடைக்க மிகவும் சிக்கலாக இருக்கிறது. இதனால் மனைவி செல்வி குரூஸ்க்கு சிகிச்சை அளிக்க போதுமான பணம் கிடைக்கவில்லை.

எனது உறவினர் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாமில் இருக்கின்றனர். அவர்களின் உதவியுடன் இங்கு வந்து சிகிச்சை பெறலாம் என்பதால் தலைமன்னாரில் இருந்து 20 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து படகு மூலம் தனுஷ்கோடிக்கு வந்தோம்என்று அந்தோணி குரூஸ தெரிவித்தார்.

இவர்களிடம் மத்திய, மாநில உளவுப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் கடலோர காவல்துறையினர் மண்டபம் அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரர்

### தேவதாஸ் விமலதாசன்

### (அருள் ஆச்சிரமம்–செபமாலைத் தாசர் சபை) 21.06.2014 அன்று காலமாகிவிட்டார்



இவர் சங்குவேலி வடக்கு, டச்சு றோட், உடுவிலைச் சேர்ந்தவரும் காலஞ்சென்றவர்களான தேவதாஸ்–அன்னப்பிள்ளை கிருபை ஆகியோரின் மகனும் அமலநாயகம் (வேவி), மங்களராக்கினி, சென்மராக்கினி மற்றும் காலஞ்சென்றவர்களான சூசைநாயகம் (அதிபர்), கிறகோரி குணதாஸ் ஆகியோரின் சகோதரரும், பொன்றோஸ், அன்னபூரணம் காலஞ்சென்றவர்களான தேவபாலன், செல்வராசா, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரது நல்லுடல் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 8.00 மணிவரை இல.5, கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ்.அருள் ஆச்சிரமத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

நாளை (23.06.2014) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் இரங்கல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதைத் தொடர்ந்து அச்சுவேலியில் அமைந்துள்ள செபமாலை மாதா ஆச்சிரமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் மாலை 3.00 மணிக்கு இரங்கல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அங்கு நல்லடக்கம் நடைபெறும்.

தகவல்:– திரு.தே.அமலநாயகம் (வேவி) சகோதரன்
தொ:பே:–0774080806, 0779227721

(6927)

## ‘நோ லிமிட்’ வியாபார...

அழிந்துவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீ அணைப்பு படையினரின் உதவியுடன் காலை 5.00 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும், இந்தக் கட்டிடம் முற்றாக நாசமடைந்து விட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்று கூறிய பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோகன இது மின்சாரம் காரணமாக ஏற்பட்டதா இல்லாவி ட்டால் சதி வேலையா என்பதைக் கண்டறிவதற்காக அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரின் உதவியை பெற்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

இந்த தீ விபத்து காரணமாக உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று கூறிய அவர் இழப்பு தொடர்பாக இதுவரை கணக்கெடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

முஸ்லிம் மக்கள் கணிசமான அளவில் வாழ்ந்து வரும் பாணந்துறை நகரில் இந்தத் தீ விபத்தின் பின்பு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக பொலிஸ் அதிரடி படையினரின் உதவியுடன் பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் அஜித் ரோஹன தெரிவித்தார்.

எனவே சில ஊடகங்கள் மற்றும் சமூக வலைத் தளங்களினால பரப்பப்பட்டு வரும் வதந்திகளை நம்ப வேண்டாமென்றும் அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, நீதியமைச்சர் ரவூப் ஹக்கிம் பாணதுறைப் பகுதிக்கு சென்று, அந்த இடத்தை பார்வையிட்டுள்ளார். (எ-11)

## முஸ்லிம் அமைச்சர்கள்...

டிருப்பதாகவும், அவசியமெனின் அங்கு சந்திக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து விசேட உலங்குவானூர்தி மூலம் பதுளைக்குப் பயணமான முஸ்லிம் அமைச்சர்கள், அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவைச் சந்தித்து முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையில், முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக உயர்மட்டக் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழமைபோல் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் டிரான்கோ தலைமையிலான குழுவினரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்ற இச்சந்திப்பில் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE

cordially invites you to its

ANNUAL PRIZE GIVING

on Thursday the 26th of June, 2014
at 4.30 p.m
in the quadrangle

Chief Guests:
The Rt.Rev.Dr.Daniel S.Thiagarajah Ph.D.
Bishop
Jaffna Diocese of the Church of South India,
Chairman, American Ceylon Mission &
Dr.Mrs.Thayalini Thiagarajah Ph.D
Director, Center for Holistic Healing

Vaddukoddai Principal


# ஐ.நா விசாரணைக் குழு...

கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன்படி இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறலகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர பணியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த விசாரணைக் குழுவில் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார் தலைமையில் 12 பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் புறம்பாக, இவ் விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுவதற்காக இரண்டு நிபுணர்களை நியமிக்க நவநீதம்பிள்ளை முடிவு செய்திருந்தார்.

இந்த நிபுணர்களில் நியூசிலாந்தின் முன்னாள் பெண் நீதிபதியான டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், அமைதிக்கானநோபல் பரிசு பெற்றவரும், பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியுமான மாரரி அரிசாரி இரண்டாவது நிபுணராகத் தெரிவாகியுள்ளதாக, நியூசிலாந்து வானொலி தெரிவித்துள்ளது.

எனினும், இதனை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை. (எ-11)


வேண்டுகோள்

பன்னையம்பதி வீரகத்தி விநாயகர் ஆலயம், புலோலி வடக்கு, பருத்தித்துறை. மேற்படி ஆலயத்தின்மீது சட்டப்படி உரிமை கொண்டாடுபவர்கள் யாராவது இருந்தால் 02.07.2014 க்குமுன் நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ, கடிதத்தின் மூலமோ ஆலய தர்ம பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளும் படி வேண்டி நிற்கின்றோம்.

இந்த கோவிலின் சட்டப்படி உரிமையை நிலை நாட்டுவதற்காகவே இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

விலாசம் :-
த.சத்தியமோகன்
பன்னையம்பதி,
பருத்தித்துறை

த.சத்தியமோகன் - தலைவர்
தர்மபரிபாலன சபை
பன்னையம்பதி வீரகத்தி
விநாயகர் ஆலயம்.

T.P. No :- 077 509 8965

(6902)


# அளுத்கம...

தருகின்றன.

முஸ்லிம்களுக்கு எதிராக இந்த வன்முறைகளைத் தூண்டியவர்களைப் பொறுப்புக்கூறவைக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

அத்துடன், சிறுபான்மையினர்மற்றும்வழிபாட்டுத் தலங்களைப பாதுகாக்க வேண்டியதும் இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடு என்றும் மேலும் வலியுறுத்தியுள்ளார். (எ-11)


Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்: KRC



வீடு விற்பனைக்கு

யாழ்.பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக 1 1/2 பரப்பு காணியில் புதிதாக கட்டப்பட்ட மேல்மாடி வீடு (ஆறு அறைகள் ரைல்ஸ் பதிப்புடன், ஆறு வாகன தரிப்பிடம் மற்றும் Full AC) விற்பனைக்கு உண்டு.

(6909)

தொடர்புகளுக்கு:-0766248177



அக்குபங்சர் சிகிச்சை

பக்கவிளைவில்லாத மாற்றுமுறை வைத்தியமான அக்குபங்சர் வைத்திய சிகிச்சை சகல ரோகங்களுக்கும் (கைவிடப்பட்ட, நாட்பட்ட) எந்த நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

தொடர்பு:

Dr.S.J.புவிராசன் MD (Ac)
077 442 4440

(6478)

நவீன வைத்திய நிலையம், அச்சுவேலி.
ஹோமியோபதி சிகிச்சையுடன் ஹோமியோபதி மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம்.



BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

அனைத்துக் கற்கை நெறிகளும் 25% விசேட கட்டணக்கழிவில்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

இச்சலுகை June 15 முன் பதிபவர்களுக்கு மட்டுமே

Batch1 25.06.2014 @08.00am ★ Batch2 28.06.2014 @08.00am ★ Batch3 30.06.2014 @04.00pm

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

(C-7723)

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



YOGIS

Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள். கேக் ஐசிங் பயிற்சிகள்.
புதிய வகுப்புக்கள் 28.06.2014 ஆரம்பமாகவுள்ளன.
சேர விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.




Mrs.Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Diploma in Advanced Modern Make-up Course with Air Brush Make-up (india)
Diploma in Home Economics (Sri Lanka)
T.P :- 0777164923, 021 222 2796



சிங்கர் தரும் இரட்டைச் சலுகைகள்

✻ விலைக்கழிவு
✻ வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு



* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

35,999/=
( Fully Automatic - 7 kg)



* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

21,249/=
( Semi Automatic - 6 kg )

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்



SAMSUNG சலவை இயந்திரங்களுக்கு 25000/= வரை மாற்று முறை விலைக்கழிவு

lenovo



lenovo LEN - NB - - i3 - 4G
Intel Core i3 (4th Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
ரூ. 88,899/=
காசுக் கொள்வனவுக்கு
ரூ. 8,890/= விலைக்கழிவு

LEN - NB - i5
Intel Core i5 (4th Gen)
15.6"HD Display,
4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்
~~ரூ. 99,799/=~~
ரூ. 89,819/=



SINX - 243AT
Intel celeron Dual Core
14" Display, 2 GB, 320 GB
DVD RW, Wifi, Webcam,
3 வருட உத்தரவாதம் இலவசம்
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 4,000/= விலைக்கழிவு
ரூ. 49,999/=

HP- i3-14NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam,
ரூ. 64,999/=



HP- i3-15NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam,
ரூ. 93,399/=
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு
ரூ. 13,400/= விலைக்கழிவு

(C-7716)

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி

| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776433888 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singersl.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.